பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 18 சனிக்கிழமை 02.01.2021 கதிர் 58

**இனி இது ரகசியம் அல்ல!**

நெருக்கடியான ஒரு கட்டத்தில் தமிழர் தரப்பு உள்ளது. இந்தச் சமயத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு 2020 விடை பெற, 2021 மலர்ந்தது.

எனினும், தமிழர் தரப்புக்கு சகுனம் சரியானதாக எனக்குப் படவில்லை.

பக்கம்02 »

# தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வரை ஐ.நா. பேரவை ஓய்வெடுக்கக்கூடாது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து



பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட அரசியல் தீர்வோடு தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வரை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஓய்வெடுக்கக்கூடாது.

– இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்தினர்.

காணாமல்போனோரின் உறவினர்களால் வவுனியாவில் நடத்தப்பட்டு வரும் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டத்தின் 1,414 ஆவது நாளான நேற்று அங்கு நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

பக்கம் 02 »

## கொரோனாச் சாவு 208 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

மூன்று ஆண்களும், பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம், ஆலையடிவேம்புப்

பக்கம் 02 »

## போர்க்குற்றங்களில் இராணுவம் ஒருபோதும் ஈடுபடவில்லையாம்!

**மீண்டும் புராணம் பாடுகின்றது அரசு**



இலங்கை இராணுவம் படுகொலைகளில் ஈடுபடவில்லை. போர்க்குற்றங்களை இழைக்கவில்லை. எனவே, நாம் எதற்கும் அஞ்சமாட்டோம்.

– இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்தன தெரிவித்தார்.

பக்கம் 02 »

**வைத்தியசாலையில் இருந்து**

## கொரோனாத் தொற்றுடன் தப்பியச் சென்ற கைதிகள்

கல்லேல்ல பிரதேசத்திலுள்ள கொரோனா மருத்துவமனையிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை தப்பிச்சென்ற சிறைக் கைதிகள் 5 பேரில் 4 பேர் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

அவர்களைத் தேடும் முயற்சிகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பக்கம் 02 »

## கடலுக்குச் செல்வோருக்கும் கொரோனா பரவும் அபாயம்!

**கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை எச்சரிக்கை**

ஆறுகள், நீரோடைகள் கடலில் கலப்பதால் கடலிலும் கொரோனா வைரஸ் தொற்றும் அபாய நிலை அதிகரிக்கலாம் எனக் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நாளொன்றுக்கு 50 ஆயிரத்துக்கும்

பக்கம் 02 »

## ராஜபக்ஷவினரைத் தோற்கடிக்கும் அடுத்த ஜனாதிபதி யார்?

**ஜோதிடரின் கருத்தால் கொழும்பு அரசியலில் பரபரப்பு**



இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து எவரும் தெரிவாக மாட்டார்கள் என்பதை பிரபல ஜோதிடர் சந்திரசிறி பண்டார திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷவினரைத் தோல்வியடையச் செய்து ஆட்சிக்கு வரவிருக்கின்ற நபர் தற்போதைய அமைச்சரவையில் அமைச்சராக

பக்கம் 02 »

## நேற்றும் 557 பேருக்குக் ‘கொரோனா’ மொத்தப் பாதிப்பு 43,856 ஆக உயர்வு

இலங்கையில் நேற்றும் 557 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 43 ஆயிரத்து 856 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 40 ஆயிரத்து 128 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 36 ஆயிரத்து 155 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 493 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருடம் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குப் பிறந்தபோது, தமிழர் தரப்பின் தலைவர் என்று மதிக்கப்படும் இரா.சம்பந்தன் கொழும்பு 'ஆசிரி' வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்குள் அனுமதிக்கப்பட்டு, பூர்வாங்க சோதனைகள் நடந்து கொண்டிருந்தன.

மூத்த தலைவரான சம்பந்தனுக்கு அடுத்த மாதம் 5ஆம் திகதி 88 வயது பூர்த்தியாகின்றது. உடல் உபாதைகள், வயதுக்குரிய மூப்பு நோய்கள் இருந்தாலும் மனோ பலத்திலும் சிந்தனையிலும் அவர் மிகத் திடகாத்திரமாகத்தான் இருக்கின்றார்.

கடந்த புதன்கிழமை 30ஆம் திகதி காலையில் யாழ் மாநகரசபை மேயர் பதவியைத் தமிழ்க் கூட்டமைப்பு இழந்தமையை அடுத்து, அது குறித்து அவரின் கருத்தைக் கேட்பதற்காகத் தமிழ்ச் செய்தியாளர் ஒருவர் அவருடன் தொடர்பு கொண்டார். தாம் வேறு விடயத்தில் 'பிஸி' ஆக இருப்பதாகவும் மாலையில் பேசும்படியும் கூறி தொலைபேசித் தொடர்பை அவர் துண்டித்தார் என அறிந்தேன்.

அவர் ஏதோ ஒரு விடயத்தில் குழப்பத்தில் இருக்கின்றார் போல் தெரிகின்றது, யாழ் மேயர் பதவி இழந்த விவகாரமாக இருக்குமோ என்ற கேள்வி சம்பந்தப்பட்ட செய்தியாளரால் எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

நான் என் வட்டாரங்கள் மூலம் உடனே தேடித் துருவிப் பார்த்தேன்.

இல்லை, 'த ஐலண்ட்' பத்திரிகையில் வந்த ஒரு செய்தியே அன்று காலையில் அவரைக் குழப்பி 'ரென்ஷன்' பண்ணியிருக்கின்றது என்று அறிந்தேன். அன்று காலைப் பத்திரிகையில் ஜினசேன ரத்துகமகே என்பவர் அந்தச் செய்தியை எழுதியிருந்தார்.

அரசமைப்பு உருவாக்கத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பு தயாரித்த தீர்வு பற்றி அந்தச் செய்தியில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

*"புதிய அரசமைப்பில் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அது உள்நாட்டில் தயாரானதாக இருந்தாலும் அதற்கு சர்வதேசத் தரப்பு ஒன்றின் உறுதிப்பாடும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும், அந்த வகையில் கூட்டமைப்பின் யோசனை அமைந்துள்ளது என சம்பந்தன் தமது கட்சியினரிடம் தெரிவித்துள்ளார்.*

*"கூட்டமைப்பின் யோசனை குறித்து அரசுத் தரப்பின் பிரதிபலிப்போ, பதிலோ வரமுன்னர் அதனைக் கூட்டமைப்பு பகிரங்கப்படுத்தக் கூடாது என்றும் சம்பந்தன் குறிப்பிட்டிருந்தார் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன"* - இந்தச் சாரப்பட அந்தச் செய்தி அமைந்திருந்தது.

இதுதான் சம்பந்தனை புதனன்று குழப்பிய செய்தி.

கூட்டமைப்பின் யோசனைத் திட்டத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இந்தியாவுக்கும், சர்வதேசதரப்புகளுக்கும் முன்னர் இலங்கைத் தரப்பு பல தடவைகளாகக் கொடுத்த உறுதி மொழிகள் குறித்து நினைவூட்டப்பட்டிருந்ததே தவிர, காணப்படக்கூடிய தீர்வுக்கோ, அரசமைப்பு ஏற்பாடுகளுக்கோ சர்வதேச தரப்பு ஒன்றின் பங்களிப்புடன் இலங்கை உறுதி அளிக்க வேண்டும் என்று எதுவுமே குறிப்பிடப்படவேயில்லை.

கூட்டமைப்பின் அரசமைப்புத் தீர்வு யோசனை 21 பக்கங்களைக் கொண்டது என்பதில் தொடங்கி பல சரியான விடயங்களைத் தெரிவித்த அந்தச் செய்தி, அரசமைப்புத் தீர்வுக்கு சர்வதேச நாடு அல்லது தரப்பின் உறுதிமொழியை (Guarantee) சம்பந்தன் கோருகின்றார் என்ற சாரப்படவும் அமைந்திருந்தது. அதுவே சம்பந்தனைக் குழப்பியதாகத் தெரிகின்றது.

அச்சமயம் யாழ்ப்பாணத்தில் நின்ற சுமந்திரனுடன் சம்பந்தன் ஐயா தொடர்பு கொண்டார்.

*"எங்கள் யோசனைத் திட்டத்தில் அப்படி சர்வதேச உறுதிப்பாட்டைக் கோரும் அர்த்தத்தை தரக்கூடிய வாசகங்கள், சொல்லாடல்கள் உள்ளனவா?"* - என்று விசாரித்தார்.

*"இல்லை"* என்று திட்டவட்டமாகப் பதிலளித்தார் சுமந்திரன் என அறிந்தேன். அப்படி சம்பந்தன் சுமந்திரனிடம் கேள்வி எழுப்பிய சமயத்தில், யாழ் மேயர் தெரிவில் கூட்டமைப்பு அப்பதவியை இழந்து சில மணித்தியாலங்கள் கடந்திருந்தன.

*"மேயர் பதவி பறிபோன தகவலை சம்பந்தன் ஐயாவிடம் அச்சமயம் தெரிவித்தீர்களா?"* - என்று சுமந்திரனிடம் நான் கேட்டேன்.

*"நான் அது குறித்து சம்பந்தன் ஐயாவிடம் இதுவரை பேசவேயில்லை. முதலில் அந்த 'ஐலண்ட்' செய்தி, அது தரக்கூடிய விளைவுகள், விபரீதங்கள் பற்றிய நெருக்கடியில ஐயா இருந்தார். ஆகவே அதுபற்றி மட்டுமே நான் அவருடன் பேசினேன். மேயர் பதவியிழப்பு விவகாரம் பற்றிய செய்தியை அவருக்குச் சொல்ல வேண்டியவன் நானல்லன். ஐயா, அது குறித்துக் கேட்டிருந்தால் நான் கூறியிருப்பேன். ஐயா கேட்கவுமில்லை, நான் அது குறித்து அவருடன் பேசவுமில்லை."* - என்றார் சுமந்திரன்.

எனினும், புதன் இரவு எங்கள் செய்தியாளருக்கு மேயர் பதவி இழப்புப் பற்றிய தமது கருத்தைத் தொலைபேசியில் சம்பந்தன் வழங்கினார்.

அடுத்த நாள் வியாழக்கிழமை (31ஆம் திகதி) மாலையில் அவரின் புத்தாண்டுச் செய்தியைப் பெற்றுக் கொள்வதற்காக அவரைத் தொடர்பு கொண்ட போது சுகயீனம் காரணமாக நேரத்துடன் அவர் படுக்கைக்குச் சென்று விட்டார் என்று கூறப்பட்டது. எனினும் சம்பந்தனின் உதவியாளர் மூலம் படுக்கையில் இருந்த அவருக்கு தொலைபேசியை வழங்கி, புத்தாண்டுச் செய்தியை அவர் வாயால் கூற செய்தியாளர் குறித்துக் கொண்டார்.

நாரிப் பிடிப்புக் காரணமாகவே ஐயா நேரத்துடன் படுக்கச் சென்று விட்டார் என்று ஐயாவின் உதவியாளர் கூறினார்.

இந்நிலையில் சம்பந்தனின் அசௌகரிய நிலைமை தீவிரமடைந்தமையால் இரவு பத்து மணி போல அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து விரையப்பட்டார். அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார். புத்தாண்டு நள்ளிரவு 12 மணிக்குப் பிறந்த போது சம்பந்தன் ஐயா ஐ.ஸி.யூக்குள்.

நேற்றுக்காலை அவரைப் பார்க்க ஐ.ஸி.யூக்குள் சுமந்திரன் அனுமதிக்கப்பட்டார். எனினும் கொரோனா தொற்றுத் தடுப்புக்காக கண்ணாடியால் மூடப்பட்ட கட்டமைப்புக்குள் தான் சம்பந்தர் இருந்தார். சுமந்திரனைக் கண்டதும் அவர் சில விடயங்களைப் பேச முற்பட்டார். ஆனால் கண்ணாடித் தடுப்புக் காரணமாக அதை செவிமடுக்க முடியவில்லை என்று சுமந்திரன் சைகையில் சுட்டிக் காட்டிய போது, அதனைப் புரிந்து கொண்ட சம்பந்தன் பின்னர் சைகை மூலமே பதில் கொடுத்தார். தாம் நலமாக இருக்கின்றார், சிக்கல் ஒன்றும் இல்லை என்று குறிப்பு மூலம் உணர்த்திய அவர் சுமந்திரன் காட்டிய புதுவருட வாழ்த்துச் சைகையைப் புரிந்து கொண்டு அதற்குப் பதில் வாழ்த்தும் தெரிவித்தாராம்.

சம்பந்தனின் உடல் நிலைமை ஸ்திரமாக இருந்தமையால் நேற்றிரவு ஐ.ஸி.யூவிலிருந்து சாதாரண கண்காணிப்பு வார்ட்டுக்கு அவர் மாற்றப்படவிருந்தார்.

★ ★ ★

கொரோனா தொற்றில் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்கும் விடயத்தில் ஆளும் தரப்பு - அதிகார பீடம் - தீவிர பிடிவாதத்தில் இருப்பதாகத் தெரிகின்றது.

முதலில் ஒரு நிபுணர் குழுவின் பரிந்துரையில் அப்படி முடிவெடுக்கப்பட்டது என்றது அரசு. ஆனால் அந்த நிபுணர் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் யார் என்ற விடயத்தை வெளியிடாமல் மழுப்பியது.

எதிர்ப்பும், கவனிப்பும் தீவிரமடைந்தமையடுத்து வைரஸியலில் உண்மையில் நிபுணத்துவம் கொண்ட ஒன்பது பேர் கொண்ட நிபுணர் குழுவை அரசு நியமித்தது. அந்தக் குழு தனது இறுதிப் பரிந்துரையை சுகாதார அமைச்சரிடம் கையளித்து விட்டது. ஏகமனதான தீர்மானம். அந்தத் தீர்மானம் பகிரங்கமாகவில்லை. எனினும், ஜனாஸாக்களை நிபந்தனைகளுடன் புதைப்பதற்கு அனுமதிக்கலாம் என்பதுதான் பரிந்துரை என்கின்றன சில உயர்வட்டாரங்கள்.

ஆனால் அந்தப் பரிந்துரை ஆளும் தரப்புக்கு பிடித்தமானதாக இல்லாமையால், முதல் நிபுணர் குழுவையும் மாறிப் பரிந்துரை வழங்கியுள்ள இரண்டாவது குழுவையும் ஒன்றாக அமர்ந்து ஆராய்ந்து ஒரு பரிந்துரையைச் செய்யுமாறு அரசு கேட்டிருக்கின்றதாம்.

தனது முடிவை மாற்றாமலிருக்க எல்லாவகையிலும் முயற்சிக்கின்றது ராஜபக்ஷ அரசு. அவ்வளவுதான்.

– மின்னல் –

## போர்க்குற்றங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

'இராணுவத்தினருக்கு எதிராக அடுத்து வரும் காலப்பகுதியில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படலாம். இதற்கு சில அரசியல் கட்சிகளும் தயாராகி வருகின்றன' என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச் மாதக் கூட்டத் தொடரை மையப்படுத்தியே மேற்படி கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்,

2009ஆம் ஆண்டு முதல் எமது இராணுவத்துக்கு எதிராக இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நாம் படுகொலைகளில் ஈடுபட்ட இராணுவம் கிடையாது. போர்க்குற்றங்களை இழைக்கவில்லை. நாம் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவமாகும். எமக்கு எந்தவொரு அச்சமும் இல்லை.

அதேவேளை, பிரிவினைவாதத்துக்கும் அடிப்படைவாதத்துக்கும் ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது. இளைஞர்கள் ஆயுதம் ஏந்தக்கூடும் என அண்மையில் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. அவ்வாறானதொரு நிலைமை உருவாகுவதற்கு இங்கு இடமளிக்கமாட்டோம்.

ஒரு காலத்தில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பவர் இருந்தார். அவரும் ஆயுதம் ஏந்தி நாட்டு மக்களை இல்லாதொழிக்க முற்பட்டார். ஆனால், திட்டம் எடுபடவில்லை.

ஆகவே, தீவிரவாதம், பயங்கரவாதம், கடும்போக்குவாதம் ஆகியவற்றைப் பின்பற்றுபவர்களின் திட்டம் நிறைவேறுவதற்கு இடமளிக்கப்படாது. அதனைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் - என்றார்.

## கடலுக்குச் செல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

அதிகமான முகக் கவசங்கள் கடலில் கலப்பதாகத் தெரிவித்துள்ள கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, இதனால் பொழுதுபோக்குக்காகக் கடலுக்குச் செல்வோருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும் எச்சரித்துள்ளது.

தினமும் 5 இலட்சம் முகக் கவசங்கள் இலங்கையில் பயன்படுத்தப்படும் அதேவேளை, பெருமளவு முகக் கவசங்கள் தினமும் வீசப்படுகின்றன எனவும் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், கொழும்பு மாநகர சபையின் கீழ் வீதிகளைச் சுத்தம் செய்வதற்காக 2 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், முகக் கவசங்கள் உரிய முறையில் அகற்றப்படாமை காரணமாக, இந்தத் தொழிலாளர்களும் கொரோனா அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர் எனவும் கொழும்பு மாநகரசபையின் மேயர் ரோசி சேனாநாயக்க தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களுக்கு நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

எதிர்வரும் மார்ச் மாதத்தில் முக்கியமான பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்காகப் பலம் வாய்ந்த நாடுகளையும், ஐ.நாவையும் வலியுறுத்தக் கோரி மின்னஞ்சல் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனப் போராட்டத்தில் ஈடுபடும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கில் தங்கள் பண்டைய தமிழ் தாயகத்தில் வசிக்கும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வைத் தீர்மானிக்க ஐ.நா. நிர்வாகத்தின் கீழ் வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

(விரிவான செய்தி 8ஆம் பக்கத்தில்)

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியில் 67 வயதான ஆண் ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்.

வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய தொற்று நோய் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுடன் ஏற்பட்ட நிமோனியா நிலைமையே உயிரிழப்புக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு 14 ஐச் சேர்ந்த 91 வயதான பெண் ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தேசிய தொற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுடன் இரத்தம் நஞ்சமாகியமை மற்றும் நிமோனியா நிலைமையே உயிரிழப்புக்கான காரணம் எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அகலவத்தைப் பகுதியைச் சேர்ந்த 65 வயதான ஆண் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுடன் ஏற்பட்ட நிமோனியா நிலைமையே மரணத்துக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தர்கா நகர் பகுதியைச் சேர்ந்த 63 வயதான ஆண் ஒருவர் கொரோனாத் தொற்றால் கடந்த செவ்வாய்க்கிழமை களுத்துறை பொது வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இருதய நோய், கொரோனாத் தொற்று மற்றும் இரத்தம் நஞ்சாகியமை உயிரிழப்புக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 208 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தாக்கத்தின் மூன்றாவது அலை மூலம் 195 பேர் உயிரிழந்துள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவு உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன.

## ராஜபக்ஷவினரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

இருக்கின்றார் என்கின்ற அதிர்ச்சி தகவலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

மேலும் குறித்த நபரது பெயரை தற்போதைய நிலைமையில் வெளியிடமாட்டேன் என்றும் ஜோதிடர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைத்தள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் ஜோதிடர் சந்திரசிறி பண்டார இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

## கொரோனாத் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

இவ்வாறு தப்பிச் சென்ற கொரோனாத் தொற்றுடைய கைதிகளில் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகலில் சிலாபம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலய கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு





யாழ்ப்பாணம், ஜன.02

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையிலுள்ள வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ணவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு சத்தியப்பிரமாணமும் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளை பெற்று வடக்கு மகாணத்துக்குப் பெருமை சேர்த்த யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மாணவி சுபாஷ்கரன் யனுஷ்காவிற்கு பரிசுப் பொருள்கள் வழங்கி, கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வரலாற்றில் முதல் முறையாக சிப்பாய்களுக்கு பதவி உயர்வு!

2021 ஆம் ஆண்டு பிறப்போடு பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியும் விசேட படையின் படைத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவால், விசேட படையின் 24 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 560 சிப்பாய்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

விசேட படையின் படைத்தளபதியின் சிபார்சின் பேரில் அதிகாரவாணையற்ற அதிகாரிகள் நிலை 1 இல் இருவரும், அதிகாரவாணையற்ற அதிகாரிகள் நிலை 2 இல் 18 பேரும், பதவி நிலை சார்ஜென்ட்கள் 61 பேரும் சார்ஜென்ட்கள் 84 பேரும் கோப்ரல்கள் 325 பேரும் லான்ஸ் கோப்ரல்கள் 70 பேரும் இவ்வாறு ஆளணி முகாமைத்துவ பணிப்பகத்தால் நிலை உயர்த்தப்பட்டுள்ளனர்.

## சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடல் நேற்று முதல் இராணுவத்தினரிடம்

சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடும் பணிகள் நேற்று முதல் இலங்கை இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 11 ஆண்டுகளாக தென்னாபிரிக்க நிறுவனம் இலங்கையில் சாரதி உரிமங்களை அச்சிட்டு வருவதாக மோட்டார் போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை இரத்து செய்து, பணியை இராணுவத்துக்கு இவ்வாறு மாற்றியுள்ளதன் மூலமாக குறிப்பிடத்தக்க நிதி சேமிக்கப்படும் என்று இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பரிந்துரைப்பின் பேரில், தற்போது ஒரு தனியார் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடும் பணியை இராணுவத்துக்கு ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டது.

## மாகாண சபைகள் முறைமைகளை நிரந்தரமாக இரத்து செய்ய வேண்டும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை

மாகாண சபை முறைமை நிரந்தரமாக இரத்து செய்யப்பட வேண்டும். இலங்கைக்கு மாகாண சபை முறைமை தேவையற்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஒருங்கினைப்பாளர் வசந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகத் தற்போது இரு வேறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. மாகாண சபைத் தேர்தல் முறைமை இலங்கைக்கு பொருத்தமற்றது என்றே குறிப்பிட வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் வெள்ளை யானை என்றே குறிப்பிட வேண்டும். மாகாண சபை முறைமையால் தேவையற்ற செலவுகள் மாத்திரமே மிகுதியாகியுள்ளன.

மாகாண சபைக்கு ஆதரவாகக் கருத்து தெரிவிப்பவர்கள் அரசியல் நோக்கங்களை இலக்காக கொண்டுள்ளார்கள். தேவையற்ற செலவுகளைக் குறைப்பது அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது. ஆகவே மாகாண சபைத் தேர்தலை நடத்தாமலிருக்க வேண்டும்.

அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து பொறுப்பற்ற வகையில் செயற்படுகிறது. மக்களாணைக்கு முரணாக செயற்பட்டால் நாட்டு மக்கள் ஜனநாயக முறையில் பாடம் புகட்டுவார்கள். - என்றார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## ரணில் வழியில் மைத்திரி

*“வரும் மாகாண சபைத் தேர்தலில் எங்களது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உரிய இடம் – பங்கு – வழங்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயார் இல்லை எனில் தனித்துக் களமிங்கவும் நாம் பின்னிற்கவும் மாட்டோம்”*

– இவ்வாறு அறிவித்திருக்கின்றார் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன.

இந்தியாவிலிருந்து வெளிவரும் ‘த ஹிண்டு’ நாளிதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

அவரது இந்தக் கருத்து அவருக்கு ‘சுடலை ஞானம்’ பிறந்திருக்கின்றமையையே காட்டுகின்றது.

அவர் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியானதும், அதைக் காட்டி சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை அதுவரை வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பலவந்தமாகப் பிடுங்கி எடுத்தார்.

அதன் பின்னர் வந்த பொதுத் தேர்தலில் அவரின் தலைமையின் கீழ்தான் மஹிந்த ராஜபக்ஷ கூட போட்டியிட்டு எம்.பி.யானார். 225 எம்.பிக்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 98 எம்.பிக்களை மக்கள் அப்போது அவரது கட்சிக்கு வழங்கினார்.

அவர் ஜனாதிபதிப் பதவியிலும் சு.கவின் தலைமைப் பதவியிலும் இருந்த போதுதான் அந்த நாடாளுமன்றில் இருந்த சு.க. கரைந்து கற்பூரம் போல ஆவியாகிக் காணாமல் போனது. அந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிந்த போது அவரது சு.கவில் எஞ்சியிருந்த எம்.பிக்களின் எண்ணிக்கை ஆக 18 தான். மிச்சம் 80 பேரும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொதுஜன பெரமுனவுக்குள் கரைந்து விட்டிருந்தனர்.

அவர் நினைத்திருந்தால் தனது அதிகாரங்களைப் பிரயோகித்து கட்சியைக் காப்பாற்றியிருக்க முடியும். எதுவும் செய்யாமல் வாளாவிருந்தமை மூலம் சுதந்திரக் கட்சி உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதைக்கு இடமளித்த மைத்திரிபால சிறிசேன, கடந்த பொதுத் தேர்தல் சமயத்திலும் கூட தமது கட்சிக்கான சரியான பங்கை பொதுஜன பெரமுனவிடம் இருந்து பெறுவதற்கு உஷாரான முயற்சியில் ஈடுபடவில்லை. ஏதோ பொலன்னறுவையில் தமக்கு ஒரு வேட்பாளர் இடம் பெற்று, தமக்கு எம்.பி. பதவி ஒன்றை உறுதி செய்து கொள்வதில் முனைப்பாக இருந்தாரே தவிர, கட்சிக்கான உரிய பங்கை பெற அவர் போராடவேயில்லை.

கட்சி தேய்ந்து கட்டெறும்பான நிலைமை வரும் வரை அனுமதித்து விட்டு – அணில் ஏறவிட்ட நாய் நிலத்தில் நின்று மரத்திலிருக்கும் அணிலைப் பார்த்துக் குலைப்பது போல – இப்போது முழுப் பலத்திலும் அதிகாரத்திலும் இருக்கும் ராஜபக்ஷக்களுக்கு சவால் விடுவது போல ‘வெத்துவேட்டு’ பேச்சு அளக்கின்றார் அவர்.

*“கடந்த பொதுத் தேர்தலில் களுத்துறை, நுவரெலியா மாவட்டங்களில் எங்களுக்கு இடம் தரவில்லை. தந்திருந்தால் நாங்கள் அங்கும் வென்றிருப்போம். குருநாகலில் இரண்டு இடங்களும், கம்பஹாவில் ஓரிடமும் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. முப்பது இடங்களை எங்களுக்கு வழங்கியிருந்தால் நாம் இருபத்தைந்து எம்.பிக்களையாவது பெற்றிருப்போம்.”* – என்று இப்போது புராணம் பாடுகின்றார் மைத்திரியார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டபோது அவரது கட்சியில் இருந்த எம்.பிக்கள் ஆக 18 தான். இப்போது தேர்தலின் பின்னர் 14 எம்.பிக்கள். இவ்வளவும் கூட மொட்டுக் கட்சியுடன் ஒட்டிக்கொண்டு நின்றமையால் கிடைத்தவை. தனித்து நின்றிருந்தால் நிலைமை கந்தல்தான். ஐ.தே.கட்சி நிலைமைதான் ஏற்பட்டிருக்கும். குறைந்தபட்சம் தனது சொந்த மாவட்டமான பொலன்னறுவையில் மைத்திரியார் வென்றிருக்கலாம். அங்கு கிடைத்த வாக்குகளினாலும், பிற மாவட்டங்களில் கிடைத்த வாக்குகளினாலும் மேலும் ஓரிரு தேசியப் பட்டியல் எம்.பி. பதவிகள் கிட்டியிருக்கலாம்.

மொட்டுக் கூட்டணிக்கு வெளியில் தனியாக நின்று சு.க. கடந்த பொதுத் தேர்தலில் இறங்கியிருந்தால் அக் கட்சியின் பெயரில் நின்று யாழ்ப்பாண மாவட்டத்தில் அங்கஜன் இராமநாதன் பெற்ற வாக்குகள் கூட அடிபட்டுப் போயிருக்கக் கூடும்.

மைத்திரி – ரணில் ஆகிய இரு தலைவர்களையும் நம்பி 2015 இல் நாட்டை மக்கள் அவர்களிடம் ஒப்படைத்தனர். தங்களுக்குள் மோதிக் கொண்ட அவர்கள், நாட்டைக் கடைத்தேற்றுவதற்குக் கிடைத்த அற்புதமான சந்தர்ப்பத்தை கோட்டை விட்டனர். அதற்கான தண்டனையை ரணில் விக்கிரமசிங்க அனுபவிக்கின்றார். அவரது கட்சி தலைதூக்க முடியாத மாதிரி அடிபட்டுப் போய்க்கிடக்கின்றது.

இனி முறைமை மைத்திரியாருக்கு. அவரும் ரணிலைப் போல தனி வழிப் பயணம் போய் தமக்கும், தமது சு.கவுக்கும் தேர்தல் முடிவுகள் மூலம் பலத்த அடி வாங்கத் தயாராகின்றார் போலவே படுகின்றது. தனி வழி போகும் அவரின் உத்தேசம் அந்தப் பாடத்தைத்தான் அவருக்கு வாங்கித்தரும். வாங்கிக் கட்டட்டும்.

## 20 ரூபா நாணயக்குற்றி வெளியிடப்பட்டுள்ளது!





இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள 20 ரூபா நாணயக்குற்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) கையளிக்கப்பட்டது.

மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷமன் நாணயக்குற்றியை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் 70 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு 20 ரூபா நாணயக்குற்றி வெளியிடப்பட்டுள்ளது.

அலுமினியம் மற்றும் வெண்கலத்தால் 20 ரூபா நாணயக்குற்றி தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய 20 ரூபா நாணயக் குற்றிகள் மூவாயிரம் வெளியிடப்பட்டன என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பொதுப் பயன்பாட்டுக்கு அன்றி, மத்திய வங்கியின் தலைமையகம் மற்றும் மாவட்ட கிளைகளில் 1,300 ரூபாவிற்கான 20 ரூபா நாணயக்குற்றிகளை மாத்திரம் விநியோகிக்கவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## முதல்வரின் சொகுசு வாகனம்: நிராகரித்தார் மணிவண்ணன்!



யாழ். மாநகர முதல்வராகத் தெரிவாகியுள்ள சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணிடம் மாநகர முதல்வருக்கான சொகுசு ரக வாகனத்தை மாநகர ஆணையாளர் கையளித்த நிலையில் அதனை ஏற்க மறுத்த மணிவண்ணனின் தனது சொந்த வாகனத்தையே பயன்படுத்தப்போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக தனது சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் தனக்கான சம்பளத்தை மக்களின் பொது நலத் திட்டங்களுக்கே பயன்படுத்தப்போவதாகவும் அறிவித்திருந்த யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் தற்போது முதல்வருக்கான சொகுசு ரக வாகனத்தையும் தான் பயன்படுத்தப்போவதில்லை என அறிவித்துள்ளார்.

மணிவண்ணனுக்கு முன்னர் யாழ்.மாநகர முதல்வராகப் பதவி வகித்த இம்மானுவேல் ஆர்னோல்ட் தனக்கு அதி சொகுசு ரக வாகனமே வேண்டும் என வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் பயன்படுத்திய சொகுசுரக வாகனத்தை கோரிப் பெற்றுப் பயன்படுத்தியிருந்த நிலையில் மணிவண்ணனின் இந்த அறிவிப்பு அவரது ஆதரவாளர்களிடம் அவர் மீதான நம்பிக்கையை மேலும் அதிகரித்துள்ளது.

## மது போதையில் வாகனம் செலுத்திய 157 பேர் கைது

கடந்த 24 மணி நேரத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 157 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

கட்டுவல, பன்னல, ரக்வான மற்றும் எல்ல ஆகிய பொலிஸ் பிரிவுகளில் கடந்த 24 மணி நேரத்தில் நான்கு அபாயகரமான விபத்துக்களும் பதிவாகியுள்ளன எனப் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் டிசெம்பர் 20 முதல் வியாழன் வரை மொத்தம் 1,571 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

டிசெம்பர் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சிறப்பு போக்குவரத்து நடவடிக்கைகள் ஜனவரி



5 ஆம் திகதி வரை தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசமான வானிலை காரணமாக இந்த நாள்களில் வீதி போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படுவதால் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

## கொழும்பில் நேற்று மட்டும் 256 நோயாளர் அடையாளம்!

இலங்கையில் வியாழனன்று கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 597 பேரில் அதிகமானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

அதன்படி கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 256 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கொரோனா கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் வியாழன் அடையாளம் காணப்பட்ட 256 நோயாளர்களுள் அதிகமானவர்கள் நாரஹேன்பிட்டி பகுதியில் பதிவாகியுள்ளனர்.

அதன்படி நாரஹேன்பிட்டியில் 79 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்தோடு, பொரளையில் 60 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் கொவிட் – 19 கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், மட்டக்களப்பு மாவட்டத்தில் 63 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 62 பேரும் கேகாலை மாவட்டத்தில் 50 பேரும் தொற்றாளர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

அதேபோல களுத்துறை மாவட்டத்தில் 36 பேரும் இரத்தினபுரி மாவட்டத்தில் 34 பேரும் கண்டி மாவட்டத்தில் 33 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 20 பேரும் பதிவாகியுள்ளனர்.

அத்தோடு, மாத்தளை மாவட்டத்தில் 13 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் 6 பேரும் குருநாகல் மாவட்டத்தில் 5 பேரும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 4 பேரும் பதிவாகியுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 3 பேரும் யாழ்ப்பாணம், பதுளை, காலி ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேரும் அனுராதபுரம் மாவட்டத்தில் ஒருவரும் நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# இந்தியாவில் சிக்கியிருந்தவர்களுடன் முதலாவது விமானம் வந்தடைந்தது!

## நடவடிக்கை எடுத்த அமைச்சர் டக்ளஸிக்கும் நன்றி தெரிவிப்பு



இந்தியாவில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு அவதிப்பட்டு வந்த நிலையில் தம்மை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு நாடு திரும்பிய மக்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

கொரோனா காரணமாக இந்தியாவில் சிக்கியிருந்த இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சி காரணமாக ஒரு தொகுதி பயணிகள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

முதற்கட்டமாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான யு.எல்1124 விமானம் மூலம் சுமார் 283 பயணிகள் கடந்த (வியாழக்கிழமை) கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த நிலையிலேயே அமைச்சருக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு தேவைகளின் நிமித்தம் குறுகிய கால பயண ஏற்பாடுகளுடன் இந்தியாவிற்கு சென்ற சுமார் 1,500 இற்கும் மேற்பட்ட இலங்கை பிரஜைகள் கொரோனா பரவலால் ஏற்பட்ட போக்குவரத்து தடங்கல் காரணமாக நாட்டுக்குத் திரும்ப முடியாமல் இந்தியாவில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருந்தினர்.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியை நாடிய நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனையுடன் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் இந்திய அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் மற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இதன் பலனாக முதலாவது தொகுதி பயணிகள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தேவையான சுகாதாரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு எந்தவிதமான நோய் தொற்றுக்களும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அழைத்து வரப்பட்டுள்ள இந்தப் பயணிகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சுகாதார நடைமுறைகளுக்கு அமைய தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்ட பின்னர் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இந்நிலையில் இந்தப் பயணிகள் அனைவரும் பியகம, கல்பந்த மற்றும் மாத்தறை போன்ற பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் நாட்டுக்குத் திரும்புவதற்காக காத்திருக்கும் ஏனையவர்களையும் விரைவில் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கு அமைய குறித்த பயண ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்ற அமைச்சரின் விசேட பிரதிநிதி திருமதி. சோபிதா ராஜசூரியர் பத்மநாதன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டிக்கோயா பகுதியில் கோரமான விபத்து 2 வயது குழந்தை உட்பட மூவர் காயம்!



ஹற்றன் – பொகவந்தலாவை பிரதான வீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், இரண்டு வயது குழந்தை உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

ஹற்றனிலிருந்து மஸ்கெலியாவுக்கு சென்ற ஓட்டோ ஒன்றும் மஸ்கெலியாவிலிருந்து ஹற்றன் நோக்கி வந்த தனியார் பஸ்ஸும், டிக்கோயா வனராஜா பகுதியில் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த ஓட்டோ, வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துடன் தொடர்புடைய ஓட்டோ சாரதியை கைது செய்துள்ள ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சஜித் தரப்பு அழைப்பை நிராகரித்தாராம் நவீன்!



ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க நிராகரித்துள்ளார்.

நவீன் திஸாநாயக்கவின் சகோதரரான மயந்த திஸாநாயக்க இதுதொடர்பான தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர்–

நான் ஐக்கிய தேசியக்கட்சி பக்கம் செல்லமாட்டேன்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறு எனது சகோதரருக்கு தேர்தலுக்கு முன்னர் அழைப்பு விடுத்திருந்தேன். அந்த அழைப்பை அவர் நிராகரித்துவிட்டார்.

எப்படி இருந்தாலும் அவரின் அரசியல் பயணத்துக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆனாலும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் வராது என்றே நம்புகின்றேன். 25 வருடங்களாக அப்பதவியில் இருப்பவர் இன்னும் பல வருடங்கள் இருப்பதற்கு முற்படுவார். – எனத் தெரிவித்துள்ளார்.

# கல்முனை மாநகர சபையில் புதுவருட சத்தியப்பிரமாணம்!

கல்முனை மாநகர சபை ஊழியர்களின் புதுவருட சத்தியப்பிரமாண நிகழ்வு, மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், பிரதி ஆணையாளர் எம்.ஐ.பிர்னாஸ், பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அர்ஷாத் காரியப்பர், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.ஆரிப், வேலைகள் அத்தியட்சகர்விஉதயகுமரன்உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது மாநகர மேயரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டமையைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதையடுத்து நாட்டுக்காக உயிர் நீத்த படைவீரர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மாநகர ஆணையாளரின் நெறிப்படுத்தலில் ஊழியர்கள் அனைவரும் சத்தியப்பிரமாண உறுதியுரையை மேற்கொண்டனர்.



அத்துடன் மாநகர மேயர் றகீப், சுபீட்சத்தை நோக்கிய ஆண்டு எனும் தொனிப்பொருளில் பிரகடன உரையையும் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அர்–ஷாத் காரியப்பர் கொவிட் – 19 விழிப்புணர்வு தொடர்பான உரையையும் நிகழ்த்தினர்.

# உக்ரேன் சுற்றுலாப்பயணிகள் 2,600 பேர் ஜனவரி 19 ஆம் திகதிக்குள் வருகை!

சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் மற்றும் பிற பங்குதாரர்களுடன் இணைந்து சுற்றுலாத் துறையினரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு மாத பைலட் திட்டத்தின் கீழ் உக்ரைனிலிருந்து சுமார் 2 ஆயிரத்து 600 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இந்தத் திட்டம் ஜனவரி 19 ஆம் திகதி முடிவடையும் என்று சிவில் விமானப் போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த டிசெம்பர் 28 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட பைலட் திட்டம் ஏற்கனவே 300 இற்கும் மேற்பட்ட உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளை வரவேற்றுள்ளது.

இதில் 6 பேர் கொவிட் – 19 வைரஸுக்கு சாதகமாக சோதனை செய்துள்ளனர், மேலும் அவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் அமைக்கப்பட்ட நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எவ்வாறெனினும் இந்த திட்டத்தில் எந்த நிறுத்தமும் இருக்காது என்று அதிகாரிகள் கூறியுள்ள நிலையில், 10 பட்டய விமானங்கள் ஜனவரி 19 வரை உக்ரேனியர்களை நாட்டுக்கு அழைத்து வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் விளைவாக சுமார் 2 ஆயிரத்து 600 சுற்றுலாப் பயணிகள் கடுமையான பயண விதிகளின் கீழ் நாட்டுக்கு வருகை தருவார்கள்.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை இவர்கள் வந்தடைந்தவுடன், சுற்றுலாப் பயணிகள் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள், பின்னர் அவர்கள் ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

அங்கு அவர்கள் 7 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்படுவார்கள். ஏழாம் நாளில், குழுக்கள் மற்றொரு பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள், அனைத்து அறிக்கைகளும் வெற்றிகரமாக நிறைவு செய்தால் மாத்திரமே பயணிகள் தங்களது சுற்றுலாப் பயணங்களை முன்னெடுக்க முடியும்.

எந்தவொரு சுற்றுலாப் பயணிகளும் தங்கள் இடங்களுக்கு அழைத்துச் செல்லும்போது தங்கள் ஹோட்டல்களை விட்டு வெளியேறவோ அல்லது பஸ்களில் இருந்து வெளியேறவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## தினம் ஒரு விவசாய தகவல்கள்

### அக்னி அஸ்திரம் தயாரிக்கும் முறை



**தேவையான பொருள்கள்**

புகையிலை அரை கிலோ,
பச்சை மிளகாய் அரை கிலோ,
வேப்பமிலை 5 கிலோ
பசு மாட்டு சிறு நீர் 15 லீட்டர்

* மேற்குறித்த பொருள்களை நன்றாக அரைத்தக் கொள்ள வேண்டும்.
* பசு மாட்டு சிறு நீர் 15 லீட்டர் அளவுக்கு எடுத்துக் கொண்டு அதில் இந்த கலவையைக் கரைக்க வேண்டும்.
* பிறகு நன்கு கொதிக்க வைத்து இறக்கிக் கொள்ள வேண்டும்.
* 48 மணி நேரம் கழித்து சுத்தமான துணியால் வடிகட்டி பயிர்களுக்குத் தெளிக்கலாம்.
* 3 மாதம் வரை பாட்டிலில் சேமித்த வைக்கலாம்.
* 200 லீட்டர் நீரில் 6 லீட்டர் அக்னி அஸ்திரத்தை கலந்து தெளிக்க வேண்டும்.
* காய்ப்பழு, தண்டு தளைப்பான் போன்ற புழுக்களை கட்டுப்படுத்தும்.

ர.ரஜீவன் விவசாய பட்டதாரி

காலைக்கதிர்
Kalaikkathir

# கொரோனா வைரஸ் பரவலால் மேலும் பல பகுதிகள் முடக்கம்!

நாட்டில் மேலும் பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இதன்படி, காத்தான்குடி பொலிஸ் பிரிவு தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. மேலும், கல்முனை பிரதேசத்தின் பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கல்முனை 01, கல்முனை 01 சீ, கல்முனை 01 ஈ, கல்முனை 02, கல்முனை 02 ஏ, கல்முனை 02 பீ, கல்முனை 03, கல்முனை 03 ஏ, கல்முனைகுடி 01, கல்முனைகுடி 02, கல்முனை குடி 03 ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்று பரவுவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்குடனேயே இந்தப் பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

## 1.6 கிலோ கிராம் ஹெரோயினுடன் அம்பலாங்கொடையில் ஒருவர் கைது!

அம்பலாங்கொடை, பென்வல பகுதியில் 1.6 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் ஹெரோயின் கொண்டு செல்லும்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இந் நிலையில் சந்தேக நபரை நேற்று பலபிட்டிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## நிர்க்கதியாகியிருந்த 59 ஆயிரத்து 377 பேர் மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்!

கொழும்பு, ஜன.02

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையால் வெளிநாடுகளில் நிர்க்கதியாகியிருந்த 59 ஆயிரத்து 377 இலங்கையர்கள் இதுவரை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 137 நாடுகளிலில் இருந்த இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவர்களில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 26 ஆயிரத்து 812 பேர் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து 5 ஆயிரத்து 484 பேரும், ஆபிரிக்க வலய நாடுகளிலிருந்து 2 ஆயிரத்து 26 பேரும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் அவர் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், 11 ஆயிரத்து 323 பேர் டிசம்பர் மாதத்தில் அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் வெளிநாடுகளில் நிர்க்கதியாகச் சிக்கியுள்ள அல்லது பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ள வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்குத் திரும்ப அழைத்து வருவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமையவே, வெளிநாடுகளில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் செயன்முறை தொடர்கின்றது எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

## திருமலையில் நேற்றும் 10 பேருக்கு கொரோனா

திருகோணமலையில் நேற்றும் 10 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 பேரும், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேரும், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருமாக 10 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மத்திய வீதியில் அமைந்துள்ள பிரபல சப்பாத்துக் கடையில் பணிபுரியும் ஒருவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டதை அடுத்து அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அவர் உட்பட 4 நபர்களுக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## நிதி அமைச்சுக்குள்ளும் ‘கொரோனா’ 3 அதிகாரிககளுக்கு தொற்று உறுதி

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக நிதி அமைச்சின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று அதிகாரிகளுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், அமைச்சின் இராஜாங்க நடவடிக்கைகளுக்கான திணைக்களம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சிலுள்ள ஏனைய தரப்பினருக்கு பி.சி. ஆர். பரிசோதனைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எழுமாறாக ஐவருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் செய்யப்பட்டதுடன், அவர்களில் நால்வருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அமைச்சின் வளாகத்தை முழுமையாக மூடுவதற்கு இதுவரை தீர்மானம் எட்டப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

## ‘சூப்பர் முஸ்லிம்’ என்ற பெயரிலான குழு தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு அறிக்கை அனுப்பப்பட்டது!

கல்முனையை தளமாக கொண்டு செயற்படுவதாக கூறப்படும் ‘சூப்பர் முஸ்லிம்’ எனும் அமைப்பு அல்லது குழு தொடர்பில் விசேட அறிக்கை ஒன்று பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு அனுப்பட்டுள்ளது.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவிலும், மேல் மாகாண உளவுப் பிரிவிலும் சேவையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஒருவர் கடந்த செவ்வாயன்று இரகசிய அறிக்கையாக இந்த விடே அறிக்கையை கையளித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த சூப்பர் முஸ்லிம் எனும் அமைப்பு தொடர்பில், எஸ்.ஐ.எஸ். எனப்படும் தேசிய உளவுச் சேவை தீவிர கண்காணிப்பு மற்றும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் முன்னர் சேவையாற்றியதாக கூறப்படும் வைத்தியர் ஒருவர் இந்த குழுவுக்கு தலைமை வகிக்கிறார் எனவும், இணையத்தளம் ஊடாக இந்தக் குழுவினர் அடிப்படைவாதத்தை விதைத்து வருகின்றனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அனர்த்தம் ஒன்றை அடுத்து கிடைக்கப் பெற்ற நன்கொடைகளை வைத்து இந்த அமைப்பு தோற்றம் பெற்றுள்ளதாகவும், தற்போதும் வெளிநாட்டு நன்கொடைகள் அந்த அமைப்புக்கு கிடைப்பதாக சந்தேகிக்கப்படுவதாகவும் அது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அறிய முடிகின்றது.

இந்த சூப்பர் முஸ்லிம் எனும் அமைப்பின் தலைவராக கருதப்படும் நபரும் அந்த அமைப்பின் போதகர்களும் யூடியூப் மற்றும் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் ஊடாகத் தமது பிரச்சாரங்களை முன்னெடுக்கின்றனர் எனவும், அந்த அமைப்பில் 33 செயற்பாட்டாளர்களும், 250 வரையிலான ஆதரவாளர்களும் உள்ளமை தொடர்பில் தகவல்கள் உள்ளதாகவும் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையிலேயே அந்த அமைப்பு தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 02.01.2021 | சனிக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 05.00 - 05.55 | தரம் - 13 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 06.00 - 06.55 | தரம் - 12 உயிரியல் |
| 08.00 - 08.55 | தரம் - 10 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 09.00 - 09.55 | தரம் - 11 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 10.00 - 10.55 | தரம் - 10 தமிழ் |
| 11.00 - 11.55 | தரம் - 11 தமிழ் |
| 12.00 - 12.55 | தரம் - 12 இரசாயனவியல் |
| 13.00 - 13.55 | தரம் - 13 இரசாயனவியல் |
| 14.00 - 14.25 | தரம் - 06 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 14.30 - 15.55 | தரம் - 08 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 தமிழ் |
| 16.00 - 16.55 | தரம் - 13 தமிழ் |
| 17.00 - 17.55 | தரம் - 13 உயிரியல் |
| 18.00 - 18.55 | தரம் - 08 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 பொறியியல் தொழிநுட்பம் |
| 23.30 - 24.30 | தரம் - 13 பொறியியல் தொழிநுட்பம் |

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=








கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

# அகத்திய மகா முனிவர்




## இன்று அவரது ஜனன நட்சத்திர தினம்

வைத்திய கலாநிதி திருமதி.தி.தயாளினி,
(தலைவர், சித்த மருத்துவ அலகு,
யாழ்.பல்கலைக் கழகம்.)

சித்தர்கள் எனப்படுபவர்கள் சித்தத்தை சிவன் பால் வைத்தவர்கள். சித்தம் என்பது யாது எனில் மனம், சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கர ணங்களுள் ஒன்றாகும். மனத்தால் (Thoughts) சிந்தனை செய்து, புத்தியால் (Anlaysis) பகுத்தாய்வு செய்து, அவ்வாறு Analysis செய்ததிலிருந்து (Conclusion) முடிவுக்கு வருதல் சித்தம் ஆகும். அம்முடிவை செயற்படுத்தல் அகங்காரமாகும்.

இவ்வாறு சித்தம் தெளிந்தவர்கள் சித்தர்கள். இவர்கள் ஞானம் பெற்றவர்கள். 'சித்தம் தெளிந்தால் சீவன் சிவலிங்கம்' எனக் கூறப்படுகின்றது. அதாவது மனிதர்கள் தமது புத்தியால் தமது சித்தத்தை தெளிந்து இறைவனை தமக்குள்ளே கண்டவர்கள். இவர்களே ஞானிகள், யோகிகள், சித்தர்கள் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார்கள். இவ்வாறானவர்கள் அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர்கள்.

இந்த அட்டமா சித்திகள் அனிமா(அணுத்துவமானது), மகிமா(உருவத்தில் பெரிது), லகிமா (இலகு தன்மை), கரிமா(கனத்தில் பெரியது), பிராப்தி (பெறும் தன்மை),பிரகாமியம்(விருப்பம்), ஈசத்துவம்(இறைவனுக்கு ஒபபானது); வசித்துவம் (கீழ்ப்படுத்தல்) என்பனவாகும். இந்த அட்டமா சித்திகளை மக்களின் நலனுக்காகவே உபயோகித்தவர்கள். உலக நன்மைக்காக பாடுபட்டவர்கள். சாதிவெறி, சமய வெறி, சடங்கு நெறியை மறைமுகமாகவும், அப்பட்டமாகவும் எதிர்த்தவர்கள் என்பதை சித்தர்கள் பாடல் வாயிலாக அறிய முடிகிறது.

சித்தர்களின் மெஞ்ஞான அலசல் யாவும் பஞ்சபூத கோட்பாடு ஆகும். அணு அறிவியலுமாகும்.

'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பர். சித்தர்கள் உடலைவிட்டு ஆன்மாவை பிரித்து வீடுபேற்றை அடைய முன் தம்முடைய தவ வலிமையை தனஞ்சயன் (தச வாயுக்களில் ஒன்று) வாயுவில் இருத்திவிட்டு மற்ற ஒன்பது வாயுக்களுடன் கபால உச்சி துவாரத்தைப் பிளந்து வெளியேறிவிடுவார்கள். இந்தியா, இலங்கையிலுள்ள தொன்மையான ஆலயங்கள் சித்தர் ஜீவ சமாதியான தலங்கள் ஆகும். சமாதியான சித்தர்களின் தவ ஆற்றலைக் கொண்ட தனஞ்சயன் வாயுமூலமாக அங்கு வரும் பக்தர்களின் குறை தீர்ப்பவர்களாகவும் கேட்கும் வரத்தை கடவுள் சார்பாக அளிப்பவர்களாகவும் என்றென்றும் இருக்கின்றார்கள்.

> மனித மேம்பாட்டுக்கு உடல் தத்துவத்தையும் பிரபஞ்ச தத்துவத்தையும் அணு அணுவாக அலசிய அறிவியல் விஞ்ஞானிகளே சித்தர்கள்.
>
> இந்த வகையில் சித்தர்களின் குருவாகவும் சித்த மருத்துவத்தின் தந்தையுமாக கருதப்படும் பெருமைக்குரியவர் அகத்திய மகா முனிவராவார். இவர் மார்கழி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் ஜனனமானார்.

அருவ நிலையில் இறை சார்ந்து இன்றும் வாழ்ந்து வருகிறார்கள் என சித்தர்களின் அண்ட பிண்ட தத்துவம் எனும் நூல் வாயிலாக அறியமுடிக்கின்றது.

மனித மேம்பாட்டுக்கு உடல் தத்துவத்தையும் பிரபஞ்ச தத்துவத்தையும் அணு அணுவாக அலசிய அறிவியல் விஞ்ஞானிகளே சித்தர்கள்.

இந்த வகையில் சித்தர்களின் குருவாகவும் சித்த மருத்துவத்தின் தந்தையுமாக கருதப்படும் பெருமைக்குரியவர் அகத்திய மகா முனிவராவார். இவர் மார்கழி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் ஜனனமானார்.

அகத்தியர் என்ற நாமத்தில் புராண கால அகத்தியர் – திருமூலர் , பதஞ்சலி, வியாகிரபாதர் போன்றோருடன் வாழ்ந்த அகத்தியர் – தொல்காப்பியரின் ஆசானான அகத்தியர் – என்ற பல அகத்தியர்கள் வாழ்ந்து இருக்கின்றார்கள்.

இதில் நந்தீசருடைய மாணவரும் திருமூலர் (சுந்தரானந்தர்), பதஞ்சலி போன்றோருடன் வாழ்ந்த அகத்தியரும் பொதிகை மலையில் வாழ்ந்தவரையுமே நாம் குரு முனி, பொதிகை மலை அகத்தியராகக் கருத கூடியதாக உள்ளது.

அகத்திய மகாமுனிவர் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்திருக்கலாம் எனவும், அவர் சிவன் தன்னை பொதிகை மலையில் இருத்தி அகத்தியம் என்ற நூலை உலகிற்கு விரித்துக் கூற செய்தார் என்றும் நந்தீசரின் எட்டு சீடர்களின் ஞானக்கண்ணை திறந்த சீடர்களில் அகத்தியரும் ஒருவர் எனவும் அகத்தியர் ஞானம் எனும் நூலில் உள்ள பாடல் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

இவர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவையும் பகுத்தறிவையும் முதன்மைப்படுத்தி அறிவே தெய்வம் எனவும், அறிவை வளர்க்கப் பல நூல்களையும் கற்றுத் தேற வேண்டும் எனவும், அதன் பின் நல்ல சற்குருவை நாடவேண்டும் எனவும், எவற்றை செய்யக் கூடாது எனவும் பின்வரும் பாடல்கள் மூலம் தெளிவாகக் கூறியுள்ளார்.

**'வணங்கியே செகட்ஜோதி ஒருவராகி**
**மானிலத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்**
**குணமான மனிதரையும் படைத்தபின்பு**
**குவலயத்தில் தான் உதித்து குருவாய் வந்து**
**பணமான சமுசாரம் ஒன்றில்லாமல்**
**பரதேசி போலிருந்து தவத்தைக்காட்டி**
**தளமான சித்தர்களை இருத்திப்போட்டே**
**தவம் செய்யப் பெரியோரை அண்டுவாயே'**

**'மோட்சமது பெறுவதற்குச் சூட்சம்சொன்னேன்**
**மோகமுடன் பொய் களவு கொலை செய்யாதே**
**காய்ச்சலுடன் கோபத்தைத் தள்ளிப்போடு**
**காசினியில் புண்ணியத்தை கருதிக் கொள்ளு**
**பாய்ச்சலது பாயாதே பாழ்போகாதே**
**பல வேத சாஸ்திரமும் கற்றுப் பாரு பாரு**
**ஏச்சலில்லாதவர் பிழைக்கச் செய்த மார்க்கம்**
**என் மக்காள் எண்ணி எண்ணிப் பாரீர் நீரே'**

**'சத்தியமே வேணுமடா மனிதனானால்**
**சண்டாளம் செய்யாதே தவறிடாதே**
**நித்திய கர்மம் விடாதே நேமம் விட்டு**
**நிட்டையும் சமாதி விட்டு நிலை பேராதே**
**புத்தி கெட்டு திரியாதே பொய் சொல்லாதே**
**புண்ணியத்தை மறவாதே பூசல் கொண்டு**
**கத்தியதோர் சள்ளிட்டு தர்க்கியாதே**
**கர்மியென்று நடவாதே கதிர் தானமுற்றே'**

அதுமட்டுமல்லாமல் யோக மார்க்கம் நின்று உனக்குள் இறைவனைக் காண்பாய், அதற்கு எளிமையான மார்க்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார். அகத் தியர்

> அகத்திய மகா முனிவர் தமது பாடலில் 6 இலட்சம் கிரந்தம் சொன்னேன் என்று கூறியுள்ளார். அவர் மருத்துவம், யோகம், ஞானம், வானியல், சோதிடம், (கோள்களின் ஆய்வு) எனப் பல துறைகளில் எழுதியுள்ளார். மருத்துவ நூல்கள் ஏராளம்.

பாடல்களிலிருந்து , மக்களின் ஆரோக்கியத்திற்காகவும், மனதை செம்மைப் படுத்துவதிலும் ஒன்றே மூலம், ஒருவனே தெய்வம் என்று, மானுடத்தை ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதிலும் நீண்ட காலம் வாழ வழிகளைக் கூறு வதிலும், பிறவா நிலை எய்துவதிலுமே தமது சித்துக்களைப் பயன்படுத்தியவர். இவர் மருத்துவத்தை உருவாக்கித் தேக ஆரோக்கியத்தைப் பேணும் வழிகளையும், உடல் இருந்தால்தான் வீடுபேற்றை எட்ட முடியும் என்பதற்காக மருத்துவ முறைகளையும் அருளியுள்ளார். இம் மருத்துவமே சித்தமருத்துவமாகும்.

அகத்திய மகா முனிவர் தமது பாடலில் 6 இலட்சம் கிரந்தம் சொன்னேன் என்று கூறியுள்ளார். அவர் மருத்துவம், யோகம், ஞானம், வானியல், சோதிடம், (கோள்களின் ஆய்வு) எனப் பல துறைகளில் எழுதியுள்ளார். மருத்துவ நூல்கள் ஏராளம். அவரது அகத்தியர் 2000ம் எனும் நூல் 3 பகுதிகளை கொண்டது. அவரது ஏடுகளிலிருந்து தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல்நிலையத்திலிருந்து தொகுக்கப்பட்ட நூலாகும். இதில் மனிதனது தேகம் பற்றியும், பஞ்ச பூதங்கள் பற்றியும் (அண்டம்), கரு உற்பத்தி, அண்டத்திற்கும், பிண்டத்திற்குமான தொடர்பு, (நோயை நிதானிப்பதற்குரிய வழிமுறைகள் பற்றியும்), 4448 நோய்கள் ஒரு மனிதனுக்கு ஏற்படலாம் எனவும், அந் நோய்களுக்குரிய காரணங்கள், குறிகுணங்கள், வகைப்பாடுகள் அவற்றிற்குரிய சிகிச்சை முறைகள், மருந்துகள் அவை தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருள்கள் (Natural resources) – மூலிகைகள், தாதுப் பொருள்கள், விலங்குப் பொருள்கள் பற்றியும், அவற்றின் நச்சுத்தன்மையை எவ்வாறு நீக்குவது என்பது பற்றியும், அவற்றைக் கொண்டு எவ்வாறு மருந்து தாயாரிப்பது, அவற்றின் அளவு, அனுமானம், எவ்வாறு கொடுப்பது பற்றியும், ஒவ்வொரு மூலப் பொருள்களும் நோயில் செயலாற்றும் தன்மை பற்றியும், தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இதனைவிட நாடி பற்றியும், நாடி பார்க்கும் முறை, அதன் மூலம் நோயை எவ்வாறு நிதானித்தல், மரண நாடியை அறிதல் எனப்பல விடயங்களை இன்றைய விஞ்ஞானத்துடன் ஒப்புநோக்கி பிரமிக்கத்தக்க அளவில் எழுதியுள்ளார்.

இவ்வாறாக மருத்துவ விடயங்களையும் ஆத்ம ஈடேற்றத்தையும் கூறிய அகஸ்திய மாமுனிவருடைய பிறந்த தினத்தை ஒவ்வொரு வருடமும் நினைவு கூறுவது யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் பாரிய பணியாகும். அகஸ்தியர் கூறிய உணவ முறைகளையும் தினமும் உணவில் சேர்க்க வேண்டிய மருத்துவ மூலிகைச் சரக்குகளையும் நாளாந்த வாழ்க்கையில் தவறவிட்டுள்ளோம். இதனால் இன்று, உலகு தற்போது COVID - 19 எனும் தொற்று நோய்க்கு ஆளாகி இருண்டுள்ளது. இந்த உலக இருளை நீக்க அகஸ்திய மாமுனிவருடைய மருத்துவ நூலை ஒளி விளக்காக ஏற்றி உலகை மீண்டும் வெளிச்சத்திற்குக் கொண்டு வர முயற்சிப்போம்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜெனீவா பிரேரணையில் 5 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி காணாமற்போன உறவுகள் போராட்டம்

காணாமல் ஆக்கப்பட்ட தாய்மார்களால், மார்ச் மாதத்தில் முக்கியமான பரிந்துரைகளைச் செயற் படுத்துவதற்காக சக்திவாய்ந்த நாடுகளையும் ஐ.நா.வையும் வலியுறுத்தக்கோரி மின் அஞ்ச லொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா வில் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் போன வர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

புதுவருடதினமான நேற்று (வெள்ளிக்கிழமை) வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது அவர்கள் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

எமது போராட்டம் இன்றுடன் 1414 நாள்களை எட்டுகின்றது. முக்கியமாக இந்த ஆண்டு மார்ச் மாதம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஒரு முக்கியமான முடிவை எடுக்க உள்ளது. அவர் க ளின் புதிய தீர்மானத்தில் சேர்ப்பதற்காக நாம் முன் வைத்துள்ள யோசனையை அனைத்து நாடுகளும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்த் தாய்மார்கள் சார்பாக சக்திவாய்ந்த நாடுகளுக்கு நாங்கள் எழுதி யவற்றின் சுருக்கமான தோற்றத்தை இங்கே தெரிவு படுத்த விரும்புகிறோம். பின்வரும் விடயங்களை ஐக் கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அமுல்படுத்தக் கேட்டுக்கொள்கிறோம். மார்ச் 2021 தீர்மானத்தில் பின்வரும் விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும் என நாம் பரிந்துரைக்கின்றோம்.

இலங்கைப் போர்க்குற்றங்களை சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லுங்கள் அல் லது செர்பிய போர்க்குற்றவாளிகளுக்கு வழங்கப் பட்டதைப் போன்ற ஒரு தீர்ப்பாயத்தை நிறுவுங்கள்.

இலங்கையின் வட.கிழக்கில் தங்கள் பண்டைய தமிழ் தாயகத்தில் வசிக்கும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வைத் தீர்மானிக்க ஐ.நா. நிர்வாகத்தின் கீழ் வாக் கெடுப்பை நடத்துங்கள், ஐ.நா முன்பு 2011 இல் தெற்கு சூடான் மற்றும் 1999 இல் கிழக்கு திமோர் போன்ற பல நாடுகளில் செய்ததைப் போல சிரியா மற்றும் மியான் மாரில் ஐ.நா தற்போது விசாரணை நடத்தி




வருவதால், இலங்கையில் நடந்த இனப்படுகொலை தொடர்பாகவும் ஐ.நா விசாரிக்க வேண்டும்.

இந்த விசாரணைகள், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற் றும் இனப்படுகொலை பற்றிய விவரங்களுக்கு கொண்டு செல்லும்.

அத்துடன் இங்கிலாந்தில் சனல் 4 தயா ரித்த 'ஸ்ரீலங்காவின் கொலைக்களங்கள்' என்ற ஆவணப்படம், இலங்கையில் போரில் நடந்த கொடுமைகளுக்கு மோசமான ஆதா ரங்களை அம்பலப்படுத்தியது. மேலும் இந்த விசாரணைக்கு ஆரம்ப சூழலை இந்த ஆவ ணப்படம் வழங்க உதவும்.

இலங்கையின் வடக்கு. கிழக்கில் தமிழர்க ளின் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள இலங்கை இராணுவத்தை மாற்ற ஐ.நா அமைதி காக் கும் படை தேவை, மேலே குறிப்பிட்ட நான்கு முக்கியமான பணிகளுக்கு யு.என்.எச்.ஆர்.சி பொறுப்பேற்க வேண்டும்.

பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட அர சியல் தீர்வோடு தமிழர்கள் நீதி பெறும் வரை யு. என்.எச்.ஆர்.சி ஓய்வெடுக்கக்கூடாது. இலங் கையின் சிங்கள போர்க்குற்றவாளிகளிகள் தாம் இழைத்த குற்றத்துக்கு பொறுப்புக் கூறப்பட வேண்டும்.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர் மன், கனடா மற்றும் ஆஸ்திரேலிய தூதர்களுக்கு நாங்கள் எழுதிய கடிதத்தில் மேற்கண்ட ஐந்து விட யங்களையும் எழுதினோம்.

எங்கள் போராட்டத்தின்போது காணாமல் ஆக்கப் பட்ட குழந்தைகளைத் தேடும் பெற்றோரை இழக்கி றோம் என்பது போன்ற எங்கள் சுருக்கமான துன்பங் களையும் நாங்கள் கடிதத்தில் முன்வைத்தோம்.

முடிவில், தயவுசெய்து எங்கள் நியாயமான கோரிக் கைகளை விரைவில் விரைவுபடுத்துங்கள். இல் லையெனில் அப்பாவி உயிர்கள் தொடர்ந்து இழக் கப்படும்.

மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நிகழும், பண்டைய தமிழ் கலாசாரம் அழிவை எதிர்கொள் ளும். – என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# 24 மணி நேரத்தில் 12 தொற்றாளர்கள்!

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 24 மணித்தியாலங்க ளில் 12 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள் ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித் துள்ளார்.

காத்தான்குடி தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது டன் மட்டக்களப்பு மாநகரிலுள்ள வர்த்தக நிலையங்களை மூன்று தினங்களுக்கு மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரில் அனைத்து வர்த்தக நிலையங்க ளும் மூடப்பட்டுள்ள நிலையில் காத்தான்குடி பிரதேசமும் முழுமையாக முடக்கப்பட்டுள்ளமையால், அந்தப் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

மேலும், பொலிஸாரும் இராணுவத்தினரும் நகரின் பாது காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதையும் காணமுடி கின்றது.

காத்தான்குடியின் இரு எல்லைப்பகுதிகளிலும் பொலி ஸாரும் இராணுவத்தினரும் இணைந்து விசேட நடவடிக்கை களில் ஈடுபட்டு வருகின்றனர். காத்தான்குடி பகுதியில் இருந்து வெளியேறுவோர் தொடர்பிலும் காத்தான்குடிக்குள் நுழை வோர் தொடர்பிலும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இதேநேரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1015பேர் தனி மைப்படுத்தப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பிராந் திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தி யர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் அலு வலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நா.மயூரன் மேலும் கூறியுள் ளவை வருமாறு:–

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 24 மணித்தியாலங்களில் 12 கொரோனா தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். இதில் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த இருவரும் வாழைச்சேனை பகுதியில் ஒருவரும் காத்தான் குடி பகுதியில் மூவரும் ஓட்டமாவடி பகுதியில் ஆறு பேருமாக 12 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக் கப்பட்டன. காத்தான்குடி பகுதியில் 665 பேர் சோதனைக்குட்படுத் தப்பட்டதில் 27 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகி யது. இதில் 23 பேர் காத்தான்குடியை சேர்ந்தவர்கள். மூவர் மட்டக்களப்பு பகுதியையும் ஒருவர் பட்டிப்பளை பகுதியையும் சேர்ந்தவர்கள்.

இதேபோன்று மட்டக்களப்பு சுகாதார பிரிவில் 549 அன்டி ஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் 26 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதில் 23 பேர் காத் தான்குடி பகுதியையும் இருவர் மட்டக்களப்பு பகுதியையும் ஒருவர் ஆரையம்பதியையும் ;சேர்ந்தவர்களாவர்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட கொரோனா செயலணி கலந்துரையாடி, காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஐந்து நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மட்டக்களப்பு மாநகரத்துக்குள் உள்ள கடைகள் கதவடைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,015 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள் ளனர். காத்தான்குடி சுகாதார பிரிவில் 300 அன்டிஜன் சோத னைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பு செயலகத்தில் நேற்று புதுவருட கடமைகளை ஆரம்பம்

புதுவருடத்தில் அரச உத்தியோகத்தர்கள் கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை நடைபெற்றது.

காலை 9 மணிக்கு சுபவேளையில் நாட ளாவிய ரீதியில் அலுவலகங்களில் கடமைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற் றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் தேசிய கொடி யேற்றப்பட்டு நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக் கான இரண்டு நிமிட மௌன வணக்கத்துடன் புதிய ஆண்டுக்கான சத்தியப்பிரமாணம் செய் யும் நிகழ்வு நடைபெற்றது.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத் தலில் இருந்து பாதுகாப்பது தொடர்பில் வைத்தி யர் ஆர்.தர்சினியால் கொரோனா பாதுகாப்புத் தொடர்பான சிறைப்புரை நிகழ்த்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதிய ஆண்டில் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் முன்னெடுக்க வேண்டிய நடைமுறைகள், சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்புவதில் அரசாங்க உத்தியோகத்த ரின் பங்கு தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட அர சாங்க அதிபர் கே.கருணாகரன் சிறப்புரையாற் றினார். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியவாறு இந்த நிகழ்வு நடைபெற்றது.

# மட்டு. செயலக உத்தியோகத்தர்களுக்கு கொரோனா அன்டிஜன் பரிசோதனைகள்

மட்டக்களப்பு. ஜன. 02

மட்டக்களப்பு மாவட்ட செலகத்தில் கடமை யாற்றும் உத்தியோகத்தர்கள் 72 பேருக்கு மேற் கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் எவ ருக்கும் கொரோனா தொற்று இல்லை என அந்த மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாக லிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கொரோனா தொற்று அதிகரித் தமையையடுத்து, அரச திணைக்களங்கள் மற் றும் வர்த்தக நிலையங்கள் உட்பட பொதுமக்கள் அதிகளவில் ஒன்று கூடும் இடங்களில் ரபிக் அன் டிஜன் பரிசோதனைகளை எழுந்தமானமாக பொது சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் கடந்த வியாழக்கிழமை, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமையாற் றும் உத்தியோகத்தர்களுக்கு அன்டிஜன் பரிசோத



னைகள் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க. கருணாகரன் ஆரம்பித்து வைத்தமையையடுத்து அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பரிசோதனை இடம்பெற்றது. இதில் எவருக்கும் தொற்று இல்லை என கண்டறியப்பட்டுள்ளதாக நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

# கானல்நீராகும் அரசியல் கைதிகளின் விடுதலை!

● பாரிஸிலிருந்து உதயன்



‘கடந்த நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் ஓர் இணக்கமான போக்கை கடைப்பிடிப்பதற்காக சட்டத்திற்கு புறம்பான முறையில் ஆள்கடத்தல், கொலைகளில் ஈடுபட்ட முன்னாள்படைத்துறையைசேர்ந்த சிலரை கைது செய்து சிறையில் அடைத்து இருந்தது. ஆனால் தற்பொழுது கோட்டாபாய அரசாங்கம் அவர்களை யுத்த வீரர்களாக கருதி விடுதலை செய்து வருகின்றது.’

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது வெறும் கானல் நீராகவே இருந்து வருகிறது. தேர்தல் வேளைகளில் மட்டும் பேசுபொருளாக பிரதான இடம் பிடிப்பதோடு சரி. மற்றபடி மாறி மாறி எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் மட்டும் மாற்றான் தாய் மனப்பான்மையோடு தான் விடயங்கள் நடந்து வருகின்றன.

தமிழ் அரசியல் கைதிகளின் சிறை வாழ்வு என்பது பல வருடங்களைத் தாண்டி இன்று இரண்டு மூன்று தசாப்ங்களை எட்டி விட்டது. அதாவது, அவர்களது வாலிப பருவம் தொடங்கி முழு இளமை காலமும் சிறைச்சாலைகளிலேயே – அதிலும் குறிப்பிட்ட சில அடிகள் கொண்ட நான்கு சுவர் கூண்டுக்குள்ளாகவே – கழிந்து விட்டது. அதில் சிலர் முதுமை காரணமாகவும், சிலர் சிறை வாழ்வு தந்த நோய் காரணமாகவும் அங்கேயே மரணித்தும் போய் விட்டார்கள்.

இன்று எஞ்சி உள்ளவர்களது வாழ்வும் கொரோனாவோடு போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இன்று அரசின் பெரும் செல்வாக்கு மிக்க பிரதான அமைச்சர்களாகவுள்ள நாமல் ராஜபக்ஷ, உதய கம்மன்பில போன்றவர்கள் கூட கடந்த காலத்தில் அரசியல் கைதிகளை முன்னாள் போராளிகள் என்று விளித்து அவர்களை தமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும், விடுதலை செய்வார்கள் குரல் கொடுத்து இருந்தனர். ஆனால் இன்று அவர்களுக்கு அதிகாரம் கிடைத்ததும், பாரா முகமாகவும், சிங்கள மக்களின் பிரதிநிதிகள் என்பது போலவுமே கருத்துரைத்து வருகின்றனர்.

எவ்வளவுதான் தமிழ்மக்கள் தன்னெழுச்சியாகச் சோர்வின்றி, ஓய்வின்றி சிறைச்சாலைகளில் உள்ள தமது உறவுகளின் விடுதலைக்காக தொடர்ச்சியான நீண்ட நெடிய அறப்போராட்டங்களை முன்னெடுத்து வந்தாலும் எந்த அரசும் அவைகுறித்து கிஞ்சித்தும் கவனம் செலுத்துவதற்குத் தயாராக இல்லை.

20 வருடங்களுக்கு மேலாக இலங்கை போன்ற நாட்டின் சிறைச்சாலைகளில் காலம் தள்ளுவது என்பது எவ்வளவு கொடியது என்பது வெறும் வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாது ஒன்று.

சர்வாதிகாரிகள் எதேச்சாதிகாரத்தின் பேரால் செய்தவைகளை சிறீலங்கா அரசாங்கம் ஜனநாயத்தின் போர்வையில் செய்து வருகின்றது.

இலங்கையின் யுத்தம் மௌனிக்கப்பட்டு 11 வருடங்கள் கடந்து விட்ட போதிலும், தமிழ் மக்களின் உடனடி மனிதாபமானம் சார்ந்த பிரச்டினைகள் எவை குறித்தும் கரிசனை கொள்வதற்கு ஆட்சியாளர்கள் தயாராக இல்லை.

கோட்டாபாய ராஜபக்ஷவின் அரசியல் சித்தாந்தம் என்பது முழுக்க முழுக்க சிங்கள பௌத்தத்தை மட்டும் முழுமையாக கொண்டது. அதனைத் தாண்டி எதனையும் செய்வதற்கு அவர் விரும்பப் போவதில்லை.

இலங்கை மூவின மக்களின் நாடு என்று பெயரளவின் சொல்லி கொண்டாலும் அது சிங்கள மக்களின் நலனைத்தான் போசித்து வருகிறது.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு எதுவும் தேவை இல்லை; அபிவிருத்தி மட்டும் போதும் என்று கடந்த காலங்களில் தொடர்ச்சியாக கூறி வந்தவர்தான் இன்றைய ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ என்பதும் குறிப்பிடத் தக்கது.

கோட்டாபாய என்ன மனோநிலையில் ஆட்சி செய்ய முனைகிறார் என்பதற்கு நல்ல உதாரணம் யாழ்ப்பாணம் மிருசிவில் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த, இராணுவ அதிகாரி சுனில் ரட்ணாயக்க என்ற குற்றவாளியை ஜனாதிபதி பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்த சம்பவமாகும். இது மறைமுகமாகத் தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவும் கருதிக்கொள்ளலாம்.

சுமார் 5 வயது பாலகன் தொடங்கி பதின்ம வயது சிறார்கள் அடங்கலாக 41 வயதுக்கு உட்பட்டவர்கள் எட்டுப் பேர் கழுத்து அறுத்து படுகொலை செய்யப்பட்டு இருந்தனர். பாதிக்கப்பட்டவர்கள் குறித்து எதுவித கரிசனையும் இல்லாமல், நீதித் துறையை அபகீர்த்திக்கு உள்ளாகும் விதமாக இந்த விடுதலை இடம் பெற்றுள்ளது.

இந்த விடுதலைக்கு எதிராக சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்த போது ஜனாதிபதி கோட்டாபாய சொன்ன காரணம்தான் வேடிக்கையாக இருந்தது. இந்த தீர்ப்பானது சர்வதேசத்தைத் திருப்திப்படுத்துவதற்காக நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டு இருந்தது. மற்றபடி அவர் அப்பாவி என்பதுதான் அவரது நிலைப்பாடு.

கடந்த நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் ஓர் இணக்கமான போக்கை கடைப்பிடிப்பதற்காக சட்டத்திற்கு புறம்பான முறையில் ஆள்கடத்தல், கொலைகளில் ஈடுபட்ட முன்னாள் படைத்துறையை சேர்ந்த சிலரை கைது செய்து சிறையில் அடைத்து இருந்தது. ஆனால் தற்பொழுது கோட்டாபாய அரசாங்கம் அவர்களை யுத்த வீரர்களாக கருதி விடுதலை செய்து வருகின்றது.

மறுபுறம் வெறும் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க மறுத்து வருகிறது இந்த அரசாங்கம். காரணம் அவர்கள் தமிழர்கள். அதேபோல் கடந்த நல்லாட்சி காலத்தில் விடுவிக்கப்பட்டவர்கள்,

விடுதலை பெற்றவர்கள் போன்றவர்களின் விடுதலைக்கு எதிராகவும் தற்போது அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் அதனை ஒரு சர்ச்சைக்குரிய பேசுபொருளாக மாற்ற முனைகின்றனர். நாடாளுமன்றத்தின் உள்ளும், வெளியே பொது மேடைகளிலும் அதற்கு எதிராக குரல் எழுப்பி வருகின்றனர் என்பதும் கவலைக்குரிய விடயமாகும். இது போன்ற கருத்துக்கள் ஒரு வகையின் ஏற்கெனவே தடுப்பிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் ஆகும்.

அரச நிர்வாக சேவைகளின் உயர்பதவிகளில் ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ அதிகாரிகள் படிப்படியாக நியமிக்கப்பட்டு வருவதென்பது அரசாங்கம் எந்த மனோநிலையில் ஆட்சி செய்ய விழைகின்றது என்பதைக் காட்டுகின்றது.

இலங்கை தீவில் தமிழ் மக்களுக்கு ஏதாவது தீர்வு அல்லது நீதி நிலைநாட்டப்பட வேண்டுமானால் அது சர்வதேசத்தின் தலையீட்டினால் கிடைத்தாலே அன்றி சிங்கள அரசாங்கத்தினால் ஒரு போதும் கிடைக்க வாய்ப்பு இல்லை. அப்படி யாராவது எதிர்பார்த்தால் அது ’கடல் வற்றி கருவாடு சாப்பிட ஆசைப்பட்டு குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு’ என்பதாகத்தான் முடியும்.

## ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலிலேயே மணிவண்ணன் முதல்வர் ஆகினார்!

### சுகாஷ் குற்றச்சாட்டு




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே ஈ.பி.டி.பி.யின் துணையுடன் தோழர் மணிவண்ணன் யாழ்.மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்த ஊடக சந்திப்பில் சுகாஷ் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழுவும் தலைமையும் எடுத்த முடிவு சரியென்பதை வெகு சீக்கிரத்தில் காலம் காட்டியுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து கொள்கை ரீதியாக நீக்கப்பட்ட முன்னாள் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன், தமிழ்த் தேச விரோத சக்திகளான ஈ.பி.டி.பி.கட்சியோடு சேர்ந்து யாழ்ப்பாண மாநகர சபையினுடைய மேயர் பதவியை கைப்பற்றி இருக்கிறார்.

அதற்கு கட்சியினுடைய கட்டுப்பாட்டை மீறி ஆதரவு வழங்கி, யாழ்.மாநகர சபையில் ஆதரவு வழங்கிய 6 உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மிகவும் விரைவில் எடுக்கப்படும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திருட்டுக் கும்பலை யாழில் மடக்கிப் பிடித்தனர் மக்கள்!

யாழ். தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட விடத்தற்பளையில் நள்ளிரவு ஆராதனைக்கு சென்ற வீடு உடைத்து திருட்டில் ஈடுபடும் முயற்சி அயலவர்களால் முறியடிக்கப்பட்டுள்ளதுடன், திருட்டுக் கும்பலைச் சேர்ந்த இருவரை மடக்கிப்பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

கொடிகாமம் விடத்தற்பளை பகுதியைச் சேர்ந்த குறித்த வீட்டார் புதுவருட ஆராதனைக்காக தேவாலயம் சென்றபோது அவர்களது வீட்டுக்குள் வாள்களுடன் நுழைந்த ஐவர் கொண்ட திருட்டுக் கும்பல் வீட்டை உடைத்து கொள்ளையிட முற்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் திடீரென ஆரவாரம் ஏற்பட்டதை அவதானித்த அயல் வீட்டார் சத்தமெழுப்பியவாறு வளவுக்குள் நுழைந்தபோது திருட்டுக் கும்பல் ஓடி அருகில் உள்ள பற்றைக்குள் மறைந்துள்ளது.

இதையடுத்து அங்கு திரண்ட அயல் பகுதி இளைஞர்கள் உள்ளிட்டவர்கள் தப்பியோடிய திருட்டுக் கும்பலை தேடும் முயற்சியில் தப்பியோடியவர்களது காலடித் தடங்களைப் பின்தொடர்ந்து அவர்கள் ஒளிந்திருந்த பற்றைப் பகுதிக்குச் சென்றனர்.

அங்கு வாள்களுடன் மறைந்திருந்த திருட்டுக் கும்பல் அருகில் வந்தால் வெட்டுவோம் என்று மிரட்டியுள்ளனர். அந்த மிரட்டலையும் பொருட்படுத்தாது அவர்களில் ஒருவரை இளைஞர் ஒருவர் துணிச்சலாக மடக்கிப்பிடித்துள்ளார்.

ஏனையவர்களால் சுற்றிவளைக்கப்பட்டு மேலும் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்ட நிலையில் மற்றைய மூவரும் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டமையையடுத்து சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த இருவரையும் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்ட இருவரில் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பொலிஸ் காவலில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவுக்கு முற்றுப்புள்ளி வைக்க சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் களத்தில்

## 25 மாவட்டங்களுக்கும் தலா ஒருவர் நியமனம்

இலங்கையில்கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் வகையில் முன்னெடுக்கும்நடவடிக்கைகளுக்காக 25 மாவட்டங்களுக்கும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் பரிந்துரைக்கமைய ஜனாதிபதி செயலகம் அனைத்து மாவட்டங்களுக்கும் 25 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளை தலைமை ஒருங்கிணைப்பாளர்களாக நியமித்துள்ளது.

இந்த நியமனம் நேற்று வழங்கப்பட்டது. அவர்கள் அனைவரும் இன்றுமுதல் தமது கடமைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

மேஜர் ஜெனரல்கள், பிரிகேடியர்கள் மற்றும் கேணல் ஆகிய தரத்திலுள்ள இராணுவ அதிகாரிகள் இவ்வாறு மாவட்ட ரீதியான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ளனர்.



அந்தந்த பகுதிகளில் உள்ள கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நோயாளிகளுடன் தொடர்புபட்ட அனைவரையும் கண்டறிந்து, அவர்களை தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு உட்படுத்தல், சிகிச்சையளித்தல், மருந்துப் பொருள் விநியோகம், உலர் உணவுப் பொருள் விநியோகம், தொழில்நுட்பத்தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் உள்ளிட்ட பல வேறு பணிகளுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை இந்த இராணுவ அதிகாரிகள் இன்று முதல் மேற் கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிசு படுகொலை: பேத்தியார் கைது

யாழ். அரியாலைப் பகுதியில் பெண் சிசுவைப் படுகொலை செய்தார் என்று பேத்தியார் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ள நிலையில் அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிசு உயிரிழந்தே பிறந்தது எனவும், அதனால் குழந்தையைத் தாம் புதைத்தனர் எனவும் சிசுவின் தாயும் பேத்தியாரும் முன்னர் வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார், சட்டவைத்திய அதிகாரி மயூரன் ஆகியோர் மேற்கொண்ட பரிசோதனை மற்றும் விசாரணையின் அடிப்படையில் குழந்தையின் முகத்தைத் துணியால் மூடி மூச்சுத் திணறவைத்து கொலை செய்ததை குழந்தையின் தாயும், தாயின் தாயும் (பேத்தியார்) ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

தானே குழந்தையைக் கொன்றார் என குழந்தையின் பேத்தியார் வாக்குமூலம் வழங்கியுள்ளார். இதையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி திருமணமாகாத இளம்பெண் அதிக இரத்தப்போக்கு என்று தெரிவித்து யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டபோதே குழந்தை பிறந்த விடயம் அம்பலமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கொரோனாத் தடுப்புச் சட்டத்தை மீறிய 2 ஆயிரத்து 24 பேர் கைது!



முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை தொடர்பில் இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இன்று காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய ஒக்டோபர் 30ஆம் திகதி முதல் இதுவரையில் 2 ஆயிரத்து 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைபேணுதல் தொடர்பில் தொடர்ந்தும் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதனால், நாட்டில் எந்தப் பகுதிகளில் இருந்தாலும் இந்த விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இந்தச் சட்டவிதிகளை மீறும் நபர்களைக் கைது செய்வதுடன் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தக் கோருகின்றது விக்கியின் கூட்டணி!

## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு விண்ணப்பம்

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், அநீதிகள் என்பன தொடர்பில் நீதியான - பக்கச்சார்பற்ற - விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்ற முக்கிய கோரிக்கை உள்ளடங்கலாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளுக்கு முன்வைக்கவுள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் முன்மொழிவுகளை அதன் தலைவர் க.வி. விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவிக்கையில் -

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்குச் சமர்ப்பிப்பதற்காக என்று தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஒரு முன்மொழிவை எனக்கு அனுப்பியிருந்தார். எனது பார்வையில் அது இலங்கை அரசுக்கு மேலும் கால நீடிப்பு வழங்கும் ஒரு முன்மொழிவாகவே உள்ளது. அவர்களுக்கு ஏற்கனவே 6 வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுவிட்டது. இனிமேலும் அப்படி வழங்கப்படக் கூடாது.

ஆகவே, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளுக்கும் சமர்ப்பிப்பதற்காக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி முன்மொழிவு ஒன்றைத் தயாரித்துள்ளது. அந்த முன்மொழிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன். அவர்களும் அதனை ஏற்றுக்கொள்வார்களாக இருந்தால், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அதனை ஒரு பொதுவான முன்மொழிவாகச் சமர்ப்பிக்க முடியும்.

அந்த முன்மொழிவில் முக்கியமான சில விடயங்கள் லியுறுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு 6 ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டுவிட்டது. இனிமேல் கால அவகாசம் வழங்கப்படக் கூடாது.

இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சிரியா, மியன்மார் போன்ற நாடுகளில் அமைக்கப்பட்ட விசேட நிபுணர் குழு போன்றதொரு செயற்பாட்டை ஐ.நா. இலங்கையிலும் நிறுவ வேண்டும். ஐ.நா. விசேட கண்காணிப்பாளர் ஒருவரை இலங்கையில் நியமிக்க வேண்டும்.

-மேற்படி கோரிக்கைகளுடன் மேலும் பல விடயங்களை எமது முன்மொழிவில் உள்ளடக்கியுள்ளோம் -என்றார்

# அரசியல் கட்சிகளைப் பதியும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்




இந்த ஆண்டு ஜனவரி முதல் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதற்கான புதிய வரையறைகளை நிர்ணயித்து வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசியத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ராஜகிரியவில் உள்ள தலைமையகத்தில் நடைபெற்றது. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, அடுத்த ஆண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமாக இருந்தால் அதற்காக நானூறு கோடி ரூபா நிதி ஒதுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் ஜனவரி 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அதே தினத்தில் மாலையில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

# தெல்லிப்பளையில் இருவருக்கு தொற்று

மருதனார்மடம் கொத்தணியில் மேலும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவரே தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் இன்று 240 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குறித்த இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் 14 வயதுடைய சிறுமி என்றும் மற்றையவர் 27 வயதுடைய இளைஞர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தலில் 14 நாள்கள் இருந்த இவர்களுக்கு தனிமைப்படுத்தல் நிறைவு பெறும் போது மேற்கொள்ளப்படும் இரண்டாம் சுற்று பரிசோதனையிலேயே அடையாளம் காணப்பட்டனர் என்றும் தெரிவித்தார்.

# கூரிய ஆயுதத்தினால் தாங்கப்பட்டு இளைஞன் கொலைசெய்யப்பட்டார்!

கொஸ்கொட பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொஸ்கொட பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பியகம பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு 9.45 மணியளவில் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த இளைஞனுக்கும் பிறிதொரு நபருக்குமிடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், பின்னர் அந்த நபர் இளைஞரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இதன்போது, படுகாயமடைந்த இளைஞன் பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பியகம பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அரச நிர்வாகத்தின் பொறுப்புகளை தகுதிவாய்ந்தவரிடம் ஒப்படைக்குக

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.02

அரச நிர்வாகத்தை முன்னெடுக்கும் பொறுப்பு தகுதிவாய்ந்த பொருத்தமான நபர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அவ்வாறின்றி, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் தமக்கு நெருக்கமானவர்களை மாத்திரம் உயர்பதவிகளில் அமர்த்துவதன் மூலம் நாட்டை முன்நோக்கிக் கொண்டுசெல்ல முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்திருக்கிறார்.

எனவே நாட்டுக்கு அவசியமான பலம் வாய்ந்த பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு நாமனைவரும்எவ்வித பாகுபடுகளுமின்றி ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

இந்த வருடத்தில் நாம் முகங்கொடுக்கக்கூடிய சமூக, பொருளாதார, சுகாதார ரீதியான சவால்கள் எத்தகையனவாக இருக்கும் என்பதை அனைவரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

தற்போது ஒட்டுமொத்த உலகநாடுகளும் பாரிய சுகாதார நெருக்கடியொன்றுக்கு முகங்கொடுத்திருக்கின்றன.

அதனை எதிர்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்வதற்கு முயற்சித்தாலும் கூட, அந்த நெருக்கடி மேலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் குறைந்தளவானோரே தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்ற வாதமொன்றை முன்வைக்கலாம்.

எனினும் நாடளாவிய ரீதியில் உயிரிழப்போருக்கு கொவிட் – 19 பரிசோதனையை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை, கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டமைக்கான அறிகுறிகள் அதிகளவானோருக்குத் தென்படாமை போன்றவற்றை கருத்திற்கொள்ளும் போது எமது நாடும் அச்சுறுத்தல் மிக்க நிலையிலேயே இருக்கின்றது.

அதேபோன்று இந்த விடயத்தில் முறையான செயற்றிட்டமின்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக ஒட்டுமொத்த நாடும் ஆபத்தை எதிர்கொண்டிருக்கின்றது.

மேலும் நாட்டின் கடன்சுமை மற்றும் வெளிநாடுகளிடம் பெற்ற கடன்களை மீளச்செலுத்துவதில் காணப்படும் நெருக்கடி, பொருளாதார மந்தநிலை ஆகியவையும் நாட்டுக்குப் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.

மேலும் அரச நிர்வாகத்தை முன்னெடுக்கும் பொறுப்பு தகுதிவாய்ந்த பொருத்தமான நபர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் தமக்கு நெருக்கமானவர்களை மாத்திரம் உயர்பதவிகளில் அமர்த்துவதன் மூலம் நாட்டை முன்நோக்கிக் கொண்டுசெல்ல முடியாது.

மாறாக திறமையானவர்களிடம் நிர்வாகப்பொறுப்பு ஒப்படைக்கப்படவேண்டும். எனவே நாட்டுக்கு அவசியமான பலம்வாய்ந்த பொருளாதார மற்றும் சமூகக்கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு நாமனைவரும் எவ்வித பாகுபடுகளுமின்றி ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும். – என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# விமான நிலையம் இம்மாதம் உத்தியோகபூர்வமாக திறப்பு!

## பிரசன்ன ரணதுங்க உறுதிபட மீண்டும் தெரிவிப்பு

சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைய இந்த மாதத்தில் விமான நிலையத்தை சுற்றுலாப் பிரயாணிகளுக்காக உத்தியோக பூர்வமாகத் திறக்க அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. விமான நிலையத்தை திறக்கும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தினருக்கும் சுற்றுலாத்துறை அமைச்சருக்கும் இடையிலான பேச்சு கடந்த வியாழக்கிழமை சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்றது. இதன்போது கருத்துரைக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட்– 19 வைரஸ் தாக்கத்தால் வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத் துறை சேவையை குறுகிய காலத்தில் மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தேவை காணப்படுகிறது. சுற்றுலா பயணிகளுக்காக விமான நிலையம் இந்த மாதம் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படும் திகதி தொடர்பில் வெகுவிரைவில் அறிவிக்கப்படும்.



சுற்றுலாத்துறை ஊடாக கொவிட் – 19 வைரஸ் கொத்தணி ஒரு போதும் உருவாகாது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறைச் சேவையை மேம்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். சுகாதார பாதுகாப்பு வழிமுறைகள் கடுமையான முறையில் சுற்றுலாத்துறை சேவையில் கடைப்பிடிக்கப்படும். – என்றார்.

# சுகாஷின் குற்றச்சாட்டு கோமாளித்தனமானது!

## போட்டுத் தாக்குகின்றார் மணிவண்ணன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பெண் உறுப்பினர்கள் தொடர்பாக சட்டத்தரணி க.சுகாஷ் வெளிப்படுத்தியுள்ள கருத்து கோமாளித்தனமானது என யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இருவர் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அதனால் அவர்கள் இருவரையும் எமது அணிக்குள் உள்வாங்கவில்லை.

ஒருவர் மணல் கொள்ளையில் ஈடுபட்டார் என பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர். மற்றையவர் மாநகர சபையில் வேலை பெற்று தரலாம் எனக் கூறி பலரிடம் பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டவர் என எனக்குவாய்மொழிமூலமுறைப்பாடுகள் கிடைக்கபெற்றுள்ளன.

குறித்த நபர் மாநகர சபை பணத்தைக் கையாடல் செய்யாமையால் என்னால் முதல்வர் எனும் ரீதியில் நடவடிக்கை எடுக்க முடியாது.



ஆனாலும் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராக இருந்தால், சட்டத்தரணி எனும் ரீதியில் நிச்சயமாக அவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கத் தயாராக உள்ளேன். –எனத்தெரிவித்தார்.

அதேவேளை, நல்லூர் பிரதேச சபையின் கடந்த அமர்வின்போது, தங்களுடன் (மணிவண்ணனுடன்) மது போதையில் வந்த காடையர் கூட்டம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பெண் உறுப்பினர்களுடன் அநாகரிகமாக நடந்து கொண்டனர் என சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பில் கேள்வி எழுப்பிய போது, 'கோமாளித்தனமான கருத்துக்களுக்கு தான் பதிலளிக்க விரும்பவில்லை. ஆக்கபூர்வமாக விடயங்கள் தொடர்பில் விவாதிப்போம்"–என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுகாதார விதி மீறிய 25 பேர் கைதாகினர்

கடந்த 24 மணிநேரத்தில் சமூக இடைவெளி பேணல் மற்றும் முகக்கவசம் அணிதல் ஆகிய சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றத் தவறிய 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியில் சமூக இடைவெளி பேணாதோர் மற்றும் முகக்கவசங்கள் அணியாதோரைக் கைது செய்யமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த வருடம் ஒக்ரோபர் முதல் 30 ஆம் திகதி முதல் இன்று வரை இத்தகைய நபர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் 2021 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

# மட்டு. அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் புதுவருட பூஜை வழிபாடு!

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் இந்து ஆலயங்களில் விசேட வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்பு மிக்க மட்டக்களப்பு அமிர்தகழி, ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் புதுவருட பூஜை சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ ஆதிசௌந்தர ராஜ குருக்களின் தலைமையில் புதுவருட பிறப்பு சிறப்பு பூஜை வெள்ளிக்கிழமை காலை நடாத்தப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமா க சுகாதார நடைமுறைகளைப் பேணிய வாறும் சமூக இடைவெளியை பேணிய வாறும் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அதிகாலை விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெற்று மாமாங்கேஸ்வரருக்கு அலங்காரத் தீபாராதனை நடைபெற்று புதுவருட சிறப்பு பூஜை சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது நாட்டில் கொரேனா அச்சுறுத்தல் நீங்கவும் அதனால் பீடிக்கப்பட்டவர்கள் சுகம்பெற்று வழமைக்கு திரும்பவும் அரசாங்கம், நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ ஆசிவேண்டி பிரார்த்தனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆலயத்தால் புதிய ஆண்டைக் குறிக்கும் வகையிலான பஞ்சாங்க நாட்காட்டியும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# கொரோனாவிலிருந்து 826 பேர் குணமடைவு!

நாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை மேலும் 826 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 36 ஆயிரத்து 155 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, 43 ஆயிரத்து 299 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 6 ஆயிரத்து 940 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 406 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 204 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டு. புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் சிறப்பு வழிபாடுகள்!

கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் புதுவருட பிறப்பை வரவேற்கும் வகையில் கிறிஸ்தவ ஆலயங்களில் நள்ளிரவு ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன.

புதுவருட பிறப்பை வரவேற்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பேராலயமாக உள்ள மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

சுகாதார நடைமுறைகளைப் பேணியவாறு மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு இந்த வழிபாடுகள் நடைபெற்றன.

மட்டக்களப்புமாவட்ட பேராயர் அருட்திரு ஜோசப்பொன்னையா ஆண்டகை தலைமையில் விசேட கூட்டுத்திருப்பலி ஆலயத்தின் பங்குத்தந்தை அன்னதாஸ் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

இதன்போது கொரோனா அச் சுறுத்தலில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்கவும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் அதில் இருந்து விரைவில் மீளவும் நாட்டில் நீடித்த அமைதியும் மகிழ்ச்சி நிலவவும் விசேட பிரார்த்தனையும் ஆயரால் நடத்தப்பட்டது.

புதுவருட விசேட திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டது.


Express Courier Services

அண்ணா விரைவும் பொதிகள் சேவை

077 8889388
075 3305500
070 3305500

3-6 நாட்கள்

லண்டன் 1000/=

பிரான்ஸ் டென்மார்க் ஜேர்மனி ஹொலண்ட் 1150/=

அமெரிக்கா கனடா 1450/= (11 kg க்கு மேல்)

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03 | 01 |
| 04 | 01 |
| 1938 | 2021 |

### பிரான்சிஸ் வின்சன்டீப்போல்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பிரான்சிஸ் வின்சன்டீப்போல் அவர்கள் நேற்று (01.01.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் பெர்னடேத் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கஸ்மீர் றோசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பிலோமினாவின் அன்பு கணவரும் அலோசியஸ், றோசணி, அல்போன்ஸ், எட்வேட், நெல்சன், சுசீலா, மரிஸ்ரெல்லா ஆகியோரின் மூத்த சகோதரனும் அலெக்ஸ்போல், லூயிஸ்போல், றொபேட் போல், ஜேக்கப்போல், பீற்றர் போல், எட்மன் போல், றெக்ஸ் போல், டக்ளஸ் போல், மேரி டிலாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தி, சுதர்சினி, வசந்தி, நிறஞ்சனா, சிந்துஜா, றோகினி, ராஜி, கிறிஸ்ரியன் ஆகியோரின் மாமனாரும், றைஷன் போல், றொயிஸ்ரன், றைஷா, லீசா, பிறின்ஷா, றொக்சி, றொக்ஷன் போல், சின்சியா, றனுஷன் போல், பிறின்சி, றெவின்போல், மேரி டிசானி, சுஜே போல், மேரி தொம்சியா, பிறினிடா, றெக்ஷனா, கிறிஸ்ரிகா ஆகியோரின் அன்பு பேரனும், றொமேறோவின் பாசமிகு பூட்டனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 02.01.2021 பி.ப 2.00 மணிக்கு வீட்டில் இருந்து எடுத்து செல்லப்பட்டு பி.ப 2.30 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவறித்தவை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

றோஸ் கோட்
கடற்கரை வீதி,
பருத்தித்துறை

தொடர்புகளுக்கு:-
077 249 7894
077 758 8224


கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1975.05.19 | பிறந்த திகதி - 1989.01.02 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - ஆயிலியம் 3 | நட்சத்திரம் - சுவாதி |
| செவ் - 4இல் | பாவம் - 17 1/2 |
| பாவம் - 8.5 | சூ/செவ் - 10இல் |
| கல்வி - CIMA | கல்வி - MBBS |
| தொழில் - கணக்காளர் | தொழில் - Doctor |
| எதிர்பார்ப்பு - படித்த பட்டதாரி | எதிர்பார்ப்பு - Doctor & Engineer |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

Beetel Lanka Courier Service

பண்டிகைக் கால விசேட விலைக் கழிவுடன்

| | |
|---|---|
| லண்டன் | 1000 |
| சுவிஸ் | 1250 |
| கனடா | 1300 |
| பிரான்ஸ் | 1100 |
| ஜேர்மன் | 1100 |
| டென்மார்க் | 1100 |
| பெல்ஜியம் | 1100 |
| ஹொலண்ட் | 1100 |

★ எண்ணை, மருந்து, கருவாடு, கறிவேப்பிலை போன்ற பொருள்கள் அனுப்பி வைக்க முடியும்.

★ கொரோனா பெருந்தொற்றினால் அல்லலபடும் எமது உறவுகளுக்காக விசேட விலைக்கழிவு

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

272, K.K.S road, Jaffna

021 222 8591 / 077 774 1117



CNR world wide Express
Courier & Cargo
International Courier & Cargo Service.

உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.

அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தர வாதம்.

கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.

வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும்வசதி.

அனுப்பும் பொதிகளை இணைய தளத்தில் கண்காணிக்கும் வசதி.

இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

Tel - 021 567 4145
Mob - 077 2931062


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.01.2021 இல் வெளியிடப்பெற்றது.

# மாகாண சபைத் தேர்தலை விடவும் மக்கள் தொடர்பில் சிந்திக்கவேண்டும்!

## ரணில் விக்கிரமசிங்க ‘அட்வைஸ்’

மாகாண சபை தேர்தலை நடத்துவதா? இல்லையா ? என்பதை விட மக்களின் சுகாதாரமே முக்கியமானதாகும். அரசாங்கம் எவ்விதமான நிலைப்பாட்டில் இருந்தாலும் மக்கள் தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தெற்கு மற்றும் பசுபிக் பிராந்திய அரசியல் விவகாரங்கள் தொடர்பான நூலாக்கத்துடன் ஆர்வமாக ஈடுபட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையடினார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

அமெரிக்காவின் பைசர் மற்றும் ஒக்ஸ்போர்ட் கொவிட் – 19 தடுப்பூசிகளில் குறைப்பாடுகள் உள்ளன. 100 வீதமான ஒரு தடுப்பூசியை இன்னும் யாரும் கண்டறியவில்லை. இதனையே உலக சுகாதார ஸ்தாபனமும் கூறுகின்கிறது.

எனவேதான், 2021 ஆண்டிலும் பாரிய மாற்றங்கள் ஒன்றும் ஏற்பட போவதில்லை என உலக சுகாதார அமைப்பும் கூறுகின்றது.

இதனையே உள்நாட்டு வைத்தியர்களும் கூறுகின்றனர். வைரஸ் தொற்று பல வடிவங்களை எடுத்துள்ளது. இந்நிலையில், கொரோனா வைரஸின் அடுத்த கட்ட பாரிய அலை ஏற்படவில்லை என உலக சுகாதார அமைப்பின் வைத்திய நிபுணர் மைக்கல் டயன் கூறுகின்றார்.

இது எவ்வாறு ஏற்படும், எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் போன்றவை தொடர்பாக ஊர்ஜிதமாகக் கூற இயலாது எனவும் குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்தில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை மோசமாக அதிகரித்துள்ளது.

அரசாங்கம் எவ்விதமான நிலைப்பாட்டில் இருந்தாலும் மக்கள் குறித்தே நாம் சிந்திக்க வேண்டும். தேர்தலை விட, கொரோனாவிலிருந்து மீள வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகியுள்ளது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதும் மக்களின் ஆர்வமாகியுள்ளது. கொவிட் தொற்றால் அனைத்துத் தரப்புகளின் பொருளாதாரமும் வீழ்ச்சிக்கண்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் தேர்தலை நடத்துவது என்பது கொரோனாவை மேலும் வியாபிப்பதாகவே அமையும்.

எனவே, மாகாண சபை தேர்தலை நடத்துவதா? இல்லையா ? என்பதை விட மக்க ளின் சுகாதாரமே முக்கியமானதாகும்.

அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் பிராந்திய மக்களுக்கு உணவுப்பொருள்களை வழங்குவதில் சிக் கல் நிலை ஏற்பட்டுள்ளது.

உண்மையிலேயே ஜனவரி முதலாம் திகதி என்பது மற்றுமொரு நாளொன்றாகவே எமக்கு அமைகின்றது.

நாட்டின் ஒரு பகுதி மக்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில், எவ்வாறு புத்தாண்டைக் கொண்டாட முடியும்?

எனவே, கொரோனா அச்சமற்றதொரு சூழல் அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவித்தார்.

## மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு அஞ்சவேண்டிய தேவை கிடையாது!

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அஞ்ச வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. அதற்கான உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன. தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அரசாங்கம் நிச்சயம் வெற்றி பெறும். ஆகவே, தேர்தலைக் கண்டு அஞ்ச வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. மாகாண சபை தேர்தல் தொடர்பில் தற்போது முரண்பாடு தோற்றம் பெற்றுள்ளமைக்கு கடந்த அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த நல்லாட்சி அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

அரசியல் நோக்கங்களுக்காக மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் தேர்தல்கள் ஏதும் பிற்போடப்படவில்லை. மாறாக தேர்தல்கள் உரிய காலத்துக்கு முன்னரே நடத்தப்பட்டுள்ளன.

மாகாண சபை தேர்தல் நடத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தோல்வியடைய கூடும் என்பதை நன்கு அறிந்தும் மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டது.

மாகாணசபை உரிமைகளை கடந்த அரசாங்கம் பாதுகாக்கவில்லை. மாகாணசபை தேர்தல் மாத்திரமல்ல தேசிய தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பத்திரம் தொடர்பாகக் கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்தாலோசித்து தீர்மானம் எடுக்கப்படும். – என்றார்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்...!
HIKVISION Mega Store
No 1 Worldwide CCTV and Video Surveillance
ஹிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
(Main Show Room in Northern Province)
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொதுப் பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தித்தரப்படும்.

நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்
HIKVISION

Hot Line -021 222 7126
077 473 6057
077 2871 841
077 899 2923
இல - 164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
164, Palaly Road, Thirunelvely, Jaffna
hikvisionmegastore@gmail.com

## 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தோரிடம் விளக்கம் கோரி மக்கள் காங்கிரஸ் கடிதம்

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் விளக்கம் அளிக்கவேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த தனது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதம் அனுப்பி இருக்கின்றது.

இதுதொடர்பாக அகில இலங்கை மக்கள் காங்கரஸ் செயலாளர் சுபைர்தீன் தெரிவிக்கையில் –

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உயர்பீடம் கடந்த வார இறுதியில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தலைமையில் கூடியது. இதன்போது அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இறுதியில் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த எமது கட்சியைச் சேந்த மூவருக்கும், அது தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் விளக்கம் கோரி கடிதம் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். முஷாரப் மற்றும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் ஆகியோருக்கு விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது என்றார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் கடந்த ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் வாக்களிப்புக்கு விடப்பட்டபோது அதற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆதரவாக வாக்களித்தபோதும் ஏனைய உறுப்பினர்களான இஷாக் ரஹ்மான், அலிசப்ரி ரஹீம் ஆகிய இருவரும் ஆதரித்து வாக்களித்திருந்தனர்.

அத்துடன் எம். முஷாரப் திருத்தத்துக்கு எதிர்த்து வாக்களித்தபோதும் இரட்டை பிரஜா உரிமையை அனுமதிப்பதற்கு தனியாக வாக்கெடுப்பு பெறப்பட்டபோது அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மறை மாவட்ட ஆயர் தலைமையில் விசேட திருப்பலி

புத்தாண்டு திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முகக்கவசங்கள் அணிந்த வண்ணம் ஒரு தொகுதி கிறிஸ்தவ மக்கள் திருப்பலியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றைய தினம் காலை 6 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

திருப்பலியின்போது ஆலயத்துக்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பை வழங்கினர். அதே நேரத்தில் மக்களின் ஆன்மீக நலனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு பங்குகளிலும் குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட அளவு மக்களின் பங்கு பற்றுதலுடன் திருப்பலிகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள ஆலயங்களில் நள்ளிரவு திருப்பலி இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.